“ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்”

# கலசம்
# KALASAM

**சித்திரை - வைகாசி - ஆனி - 2021**



பிலவப் புதுவருடம் பிறக்கட்டும்
நலமாய் நம்மையது காக்கட்டும்

ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி 29

# கலசம்
# KALASAM

ஒலி 98

www.saivamunnettasangam.com Charity Registration No:292085

FREE ISSUE

# திருமுறைகளைப் பேணுவோம்

இறைவன் தானே அருளியது திருமறை. தன்னுடைய அடியார் மூலமாக அருளுவித்தது திருமுறை. இவை இரண்டையும் ஓதுவது என்றுதான் சொல்வது மரபு. வேதம் ஓதுதல், திருமுறை ஓதுதல் என்போம். இரண்டுமே ஆலய வழிபாட்டிலே முக்கியமானவை. திரு என்ற சொல் இறை சம்பந்தமானது. செல்வம், நல்வினை, இலக்குமி என்று வேறும் பல பொருள்கள் திரு என்ற சொல்லுக்கு உள. கோயில்களிலே தேவாரம் பாடும் வழக்கம் பல நூற்றாண்டு காலமாக இருந்துள்ளது என்பதற்கு கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. கி.பி *825* இல் மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் திருப்பதியம் விண்ணப்பம் செய்தவர்களுக்கு மானயம் வழங்கியதாக வரலாறு உண்டு. திருப்பதியம் என்பது தேவாரம் ஆகும். இன்று இலால்குடி என வழங்கும் திருத்தவத்துறை என்ற பதியில் இருக்கும் சிவபெருமான் முன்னிலையில், கி.பி. *943*இல், இருவர் தினமும் திருப்பதியம் விண்ணப்பம் செய்ததாகவும் சிவகோசரி, பிராடன் என்ற இந்த இருவர்க்கும் நிவந்தம் வழங்கியதாகவும் கல்வெட்டுக்கள் உள்ளன. சிவகோசரி என்பதால் முப் பொழுதும் திருமேனி தீண்டும் சிவாசாரியர் என்பதும் பிராடன் என்பவர் தேவாரம் ஓதுபவர் என்பதும் தெளிவாகின்றன.

இலண்டனில் பல கோயில்களிலே பஞ்சபுராணம் ஓதுவதற்கு என்று யாரும் இல்லை. கோயிலுக்கு வருபவர்கள் யாராவது பாடுவர். அதிலே பலருக்குத் திருமுறை என்றால் என்ன என்பதே தெரியாது. பாலுந் தெளிதேனும், ஐந்து கரத்தனை என்று எல்லாமே பாடுவர். பெரிய புராணம் பாடவேண்டிய இடத்தில், கந்தபுராணமோ அல்லது வேறு பாடல்களோ பாடுவர்.

'லூயிஷாம் சிவன் கோயி'லில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஆன்மிக உணர்வை ஏற்படுத்தும் திருமுறை ஒலி கேட்கிறது. விம்பிள்டன் ஸ்ரீகணபதி கோயிலிலும் அன்பர்கள் சிலர் பண்ணிசையை ஒழுங்காகக் கற்று ஓதுகிறார்கள். ஈடுபாடுகொண்ட சில பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளைத் திருமுறை கற்க ஊக்குவிப்பது மகிழ்ச்சி தருகிறது. சிவன்கோயிலைச் சார்ந்த அன்பர்கள் சிலரும் பண்ணிசை பயிலுகின்றனர். இவை எல்லாவற்றுக்கும் காரண மானவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் சென்னை "தமிழிசை சங்க"த்தில் "பண்ணிசை அரசு" என்ற விருது பெற்ற ஓதுவார்மூர்த்தி திரு சாமி தண்டபாணி அவர்களும் அவரை இந்நாட்டுக்கு அழைத்தவர்களுமே!

திருமுறை எனும்போது அதை ஓதுவதற்கு வசதி செய்வது அவசியம். நம்முன்னோர் கட்டிக்காத்த திருமுறைகள் நமக்குக் கிடைத்த; கிடைத்தற்கரிய பொக்கிஷங்கள். எனவே கோயில்கள் தமக்கென ஓர் ஓதுவாரை அமர்த்தி, தேவாரம் ஓதவைப்பது சைவத்துக்கும் நல்லது; இங்குள்ள நமது சிறுவர்களுக்கும் நல்லது. நம்முடைய விலைமதிப்பற்ற திருமுறைகளை நாம் பேணவேண்டாமா? ஆலய அறங்காவலர்கள் சிந்திக்கவேண்டிய விடயம் இது,

**ஜெகதீஸ்வரன் - ஆசிரியர்**

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

**விளம்பரம் நிருவாகம்**
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

**இலங்கைத் தொடர்பு**
வை சிவனருட்செல்வர்

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த இதழில்


| | |
|---|---|
| எந்த அளவு வைராக்கியம்! - கந்தபுராணச் சிந்தனைகள் | 03 |
| தியானம் | 08 |
| திரு ஆவடுதுறை கோயில் - பயணக்கட்டுரை | 09 |
| கொக்கட்டிச்சோலை சுயம்பு ஆலயம் | 13 |
| "அரன் நாமமே சூழ்க" | 17 |
| நினைவில் நிற்பவை | 19 |
| திருவிளக்கு | 21 |
| சிவயோக சுவாமிகள் | 22 |
| பொலன்னறுவைக் காலத்துச் சைவம் | 29 |
| திருக்குறள் கதைகள் | 32 |
| மகத்துவம் மிக்க பங்குனி உத்தரம் | 35 |
| பாம்பன் சுவாமிகள் | 37 |
| சித்திரைப் பௌர்ணமி விரதம் | 40 |
| மகாசிவராத்திரி | 43 |
| **Krishna's Arguments** | 46 |


**அட்டைப்படம் வடிவமைப்பு - குகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த அளவுவரை வைராக்கியம்!

## கந்தபுராணச் சிந்தனைகள்

**Dr** க சிவலோகநாதன்

முயற்சி திருவினையாக்கும் என்பது உலகாயதத்தின் தாரக மந்திரம்.

சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது. குறள் 647

என்று வள்ளுவர் சொல்கிறார். அஞ்சாமை கலந்த வைராக்கியம் வெற்றியின் மூலாதாரமாக அமைகிறது. எதிரியிலும் பார்க்க ஒரு விநாடி கூடுதலாகத் துணிவோடு நிற்பவன் வெற்றி வானாகிறானென நெப்போலியன் சொன்னதாகச் சரித்திரம் சொல்கிறது. இவ்வாறு வைராக்கியம் வெற்றிக்கு அத்தியாவசியமானதொரு குணாதிசயமாக இருக்கின்றது. மீண்டும் வள்ளுவர் சொன்ன குறளொன்றைப் பார்த்தால்:

நுனிக்கொம்ப ரேறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும் குறள் 476

ஒரு மரத்தின் நுனிக்கொப்பில் ஏறியவர், அதையும் கடந்து மேலும் ஏற முயன்றால் அந்த முயற்சி அவருடைய உயிருக்கு முடிவாக நேர்ந்துவிடும் என்று இக் குறள் சொல்கிறது. அவ்வாறாயின் வாழ்விலே எந்த அளவுவரை வைராக்கியம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது ஒரு கேள்விக்குறி ஆகிறது. முதலீடு, புதுமுயற்சி, வெளிநாட்டுப் பயணம், கல்வி என்று பல இடங்களிலே எவ்வளவோ துணிச்சலான முதலீடுகள், முயற்சிகள் செய்தே இன்றைய உலகில் முன்னேற வேண்டியுள்ளது. இதைக் கந்தபுராணம் காட்டும் சைவத் தமிழ்க் கலாசாரம் எவ்வாறு அணுகியிருக்கின்றது என்பதை நோக்குவோம்.

சூரன், தாயாகிய மாயையின் அறிவுறுத்தலின்படி, தம்பிமாரோடு வடதிசைக்குச் சென்று பெரிதொரு யாகசாலை அமைத்து மிகவும் பெரியதொரு வேள்வியைச் சிவபெருமானை அன்போடு நினைத்துக் கொண்டு நடாத்துகிறான். தாயாகிய மாயை அதற்குத் தேவையான நிதியுதவி முழுவதையும் செய்கின்றாள். பதினாயிரம் ஆண்டுகள் இவ்வாறு கழிகின்றன. சிவபெருமான் வெளிப்படவில்லை. வேள்வி பயனளிக்கவில்லை. வைராக்கியம் நிறைந்த சூரன் தம்பிமாரிடம் யாகத்தை ஒப்படைத்துவிட்டு, வானிற் சென்று தன்னுடைய உடலை அரிந்து அரிந்து ஓமகுண்டத்தில் போடுகிறான். குருதியைச் சொரிகின்றான். உடல் மீண்டும் மீண்டும் வளர்கின்றது. அவனும் தொடர்ந்து அரிந்து ஓமகுண்டத்தில் இடுகிறான். இவ்வாறு இன்னொரு ஆயிரம் ஆண்டுகள் கழிகின்றன. அப்பொழுதும் சிவபெருமான் வெளிப்படவில்லை. வேள்வி பயனளிக்க வேயில்லை. இந்த நிலையில் வைராக்கியமே உருவான சூரன் ஓமகுண்டத்திலே விழுந்து உயிரை விடுவது, உயிரை அர்ப்பணிப்பது எனத் தீர்மானிக்கின்றான். பலவீனமடைந்த அசுர குலத்திலே தோன்றி தாயாகிய மாயையினால் கொடுக்கப்பட்ட பாரம்பரிய தேட்டங்களை யெல்லாம் செலவு செய்து வேள்வி நடாத்திக் கொண்டிருக்கின்ற சூரன், தன்னுடைய ஒப்பற்றதாகிய உயிரை விடத்துணிகின்றான். துணிந்து ஓமகுண்டத்தின் நடுவே நின்ற வச்சிரத்தூணின் வழியே உருவிக் கீழே போய்த் தன்னுடல் முழுவதும் பொடியாகுமாறு மனம் பதைபதைத்து இறந்தான். இதை ஓமகுண்டத்தில் அக்கினியை வளர்த்துக் கொண்டிருந்த சிங்கமுகன் பார்க்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதின் உச்சினின் றுருவியே வச்சிரகம்பத்
தடிதனிற் சென்று சூரபன்மாவெனும் அவுணன்
படிவமுற்று நுண் துகளூற உளம்பதை பதைத்து
முடிய மற்றது கண்டனன் மடங்கல்மா முகத்தோன்

-அசுரர் யாகப் படலம்-91

சிங்கமுகாசுரனுக்கு உயிரே அடங்கிப் போய்விட்டது. பெரிதொரு துக்கமான கடலிலே மூழ்கினான். அழுது அரற்றினான். பலவிதமாகச் சொல்லிச் சொல்லிப் புலம்பினான். அசுர கூட்டம் முழுவதும் அழுதது. ஆனால் சிவபெருமான் வெளிப்படவில்லை. வைராக்கியத்தின் எல்லைக்கே சென்ற சிங்கமுகன் தமையன் இட்ட கட்டளைப்படி ஓமகுண்ட அக்கினியைத் தொடர்ந்து வளர்த்தான். தமையனைப் போன்றே தன்னுடைய தலைகளை அரிந்து ஓமகுண்டத்திலிடத் தொடங்கினான். தலைகள் மீண்டும் முளைத்துக் கொண்டன. அந்த நிலையிலும் சிவபெருமான் தோன்றவில்லை. வைராக்கியத்தின் எல்லைக்கே சென்றுவிட்ட சிங்கமுகாசுரன் தமையனைத் தொடர்ந்து தானும் ஓமகுண்டத்தில் குதித்து உயிரைவிடத் தீர்மானித்தான். அவ்வாறு அவன் குதிக்க முயன்ற நேரத்திலே சிவபெருமான் தோன்றினார். சிங்கமுகாசுரனைத் தடுத்து இறந்த சூரனையும் எழுப்பினார். நீ விரும்பிய வரங்களைக் கேள் என்று சூரனைக் கேட்டார். சூரன் பல வரங்களைக் கேட்டுப் பெற்றுக்கொண்டான். சிங்கமுகாசுரனுக்கும் தாரகனுக்கும் சூரனுடைய இரண்டு தோள்கள் போல வல்லமை பெற்றுத் திகழுமாறு வரமருளிப் பல வகையான ஆயுதங்களையும் வளங்களையும் அருளிவிட்டு மறைகிறார் சிவபெருமான். பல காலங்களிற்குப்பின் சூரனுடைய ஆட்சியின் தலைநகரமான மகேந்திரபுரிக்குச் சென்ற வீரவாகுதேவர், “உடலிளைக்கப் பெருந்தவம் செய்பவர்களில் சூரனைப்போல வைராக்கியத்துடன் தவம் செய்து உயிரை விட்டு இறந்தவர் ஒருவருமில்லை. ஆராயுமிடத்து மூன்று கண்களையுடைய எம் சிவபெருமான் இவனுக்கு வரம் அளித்ததுபோல் மற்றவர்க்கு அளித்ததும் இல்லை” என்று சொல்கிறார்.

ஓய்ந்து தவம் புரிவோருள் உவன் போல்
மாய்ந்தவர் இல்லை மறத்தொடு நோற்றே
ஆய்ந்திடும் முக்கண் எம் ஐயனும் இன்னோற்
கீந்ததுபோற் பிறர்க்கீந்ததும் இல்லை

-அவைபுகு படலம் 41

இது ஒரு நிகழ்வுத் தொடர். சூரனுடைய வைராக்கியம் அசுர குலம் முழுவதையும் பல யுகங்களுக்கு பெரும் போக வாழ்வை அநுபவிக்க வைத்த நிகழ்வு. இனி அடுத்து நிகழ்வுத் தொடருக்குச் செல்வோம்.

சிவபெருமானுடைய ஆக்ஞைப்படி முருகப்பெருமான் பூதப்படைகள் சூழ்ந்து வரச் சூரனுடன் போர் செய்ய வருகின்றார். வரும் வழியிலே பிரமாதி தேவர்களின் வேண்டுகோளின்படி சூரனின் தம்பியாகிய தாரகாசுரனும் அவனுடைய துணைவனான கிரவுஞ்சனும் யுத்தத்தில் அழிக்கப்படுகின்றனர். தாரகனின் மைந்தனான அசுரேந்திரன் தந்தையாரின் ஈமக்கிரியைகளை முடிக்கின்றான். தாயாகிய சவுரியும் தாரகனின் மற்றைய மனைவியரும் உடன்கட்டை ஏறுகின்றனர். எல்லோருடைய கடன்களையும் முடித்துக் கொண்டு அசுரேந்திரன், சூரனுடைய தலைநகரான மகேந்திரபுரிக்கு செல்கின்றான். நடந்தவற்றை பெரியதந்தையான சூரனிடம் சொல்கின்றான். முதலில் நம்ப மறுத்த சூரன், உண்மையை உணர்ந்ததும் கவலைக் கடலில் மூழ்கினான். முழு மகேந்திரபுரியுமே சோகக் கடலில் ஆழ்ந்தது. சூரனுடைய சோகம் விரைவில் கொடும் கோபமாக மாறியது. புகழையுடைய என்னுடைய தம்பியின் உயிரைக் குடித்த கந்தனை வென்று வர வேண்டும். ஆதலால் என்னுடைய தேரையும், கொடிய படைக்கலங்களையும் கவசத்தையும் நொடிப்பொழுதில் கொண்டு வாருங்கள் என்று சூரன் கட்டளையிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிளவல் ஆருயிரை மாற்றிவரு கந்தன்
தன்னிகல்க டந்துசய மெய்திவரில் வேண்டும்
என்னிரதம் வெம்படையி டுங்கவசம் யாவும்
உன்னுகணம் ஒன்றின்முனம் உய்திடுதி ரென்றான்

-அசுரேந்திரன் மகேந்திரஞ் செல் படலம் - *48*

யுத்தத்துக்கான வைராக்கியம் பிறந்து விடுகிறது. அமைச்சர்கள் சூரனைத் தடுத்து நிறுத்துகின்றனர். இதன் பின்னர் வீரவாகுதேவர் தூதுவரக வருகின்றார். பலத்த காவலையும் அரணையுமுடைய மகேந்திரபுரியிலே அத்தாணி மண்டபத்திலே இருந்த சூரன் முன் சென்றார். பார்த்தவர் எல்லோரும் இவர் சிவபெருமான் தானோ என ஐயமுற்றனர். சபையை அடைந்த வீரவாகுதேவருக்கு உட்கார ஆசனம் கூடக் கொடுக்கப்படவில்லை. முருகப்பெருமானைத் தியானித்த வீரவாகுதேவருக்கு முன்னே ஒரு சிறந்த ஆசனம் வருகிறது. வீரவாகுதேவர் அதிலே உட்காந்தார். தன்னுடைய பெருங்காவலை மீறி வந்து தன்னெதிரே உட்கார்ந்த வீரவாகுத்தேவர் முருகப்பெருமானின் தூதுவர். அவரிடம் இவ்வளவு வல்லமை இருந்தால் முருகப்பெருமானின் வல்லமை எவ்வாறாக இருக்கும் என உய்த்துப் பார்க்காத சூரன் கடும் கோபம் கொள்கின்றான். சூரன் செய்த பிழைகளைச் சொல்லித் தேவரைச் சிறை விடுமாறு சொல்லும் முருகப்பெருமானின் செய்தியைச் சொல்கிறார் வீரவாகுதேவர். சூரனின் கோபம் மேலும் அதிகரிக்கிறது. முருகப்பெருமானின் வலிமையையும் பேராற்றலையும் பற்றி வீரகுதேவர் விளக்கினார். சூரனின் கோபம் கட்டுக்கடங்கவில்லை. "யாவற்றையும் சொல்வதால் பயன் என்ன? நான் தேவர்களை சிறையிலிருந்து விடுவிக்க மாட்டேன். நீ அறிவற்ற பேதையாதலினால் ஒரு குழந்தையின் பேச்சைக் கேட்டுகொண்டு தூதுவனாக வந்தாய். உன் உயிரை உனக்கு நான் தந்தேன். நீ உயிர் உள்ளவனாகப் போவாயாக" எனச் சூரன் சொன்னான்.

ஓதி என்பல அமரரை விடுகிலன் உணர்ச்சி
ஏது மில்லதோர் மகவுதன் புன்மொழிஏற்றுப்
பேதை யாதலின் ஒற்றனாய் வந்தனை பிழைத்துப்
போதி நின்னுயிர் தந்தனன் யானெனப் புகன்றான்.

-அவைபுகு படலம் *122*

இந்தப் பதிலாற் கோபமுற்ற வீரவாகுதேவர் அவன் யுத்தத்தால் அழிவது உறுதியென்றும், அதற்கு முன் அநுபவிக்க வேண்டியவற்றை அநுபவிக்குமாறும் கூறி, யுத்தத்துக்குத் தயாராகுமாறு கூறிப் புறப்பட்டார். ஆனால் சூரன் தன்னுடைய ஆட்களை விட்டு அவரைப் பிடித்துச் சிறையிலிட முயன்றான். காவலாளிகள் வீரவாகுதேவரால் கொல்லப்படுகின்றனர். வீரவாகுதேவர் மகேந்திரபுரியைச் சின்னாபின்னப்படுத்தினார். எதிர்த்து வந்த சூரனின் மகன் வச்சிரவாகு கொல்லப்படுகின்றான். யுத்தத்துக்கான வைராக்கியம் கூடுகின்றது. சூரன் மந்திராலோசனை நடத்தினான். சிங்கமுகாசுரனைத் தவிர எவரும் யுத்தத்துக்கு மாறாக எதுவும் சொல்லவில்லை. எல்லோரும் ஆதரித்தனர். சிங்கமுகாசூரன் மட்டும் தேவரைச் சிறையினின்று விடுவதே சரியானது என்றும் முருகப்பெருமானைச் சிறுகுழந்தை என்று எண்ணாதே; சிவபெருமானே அவர் என்றும் சொல்கிறான். தொடர்ந்து அவன், "ஞானமே உருவான அந்தத் தலைவனின் இயல்பை நானும் நீயும் எளிதாகச் சொல்லமுடியுமா? மௌனத்தினின்றும் நீங்காத முனிவரும் முழுவதும் அதனைத் தெளிந்தாரில்லை. தம்முடைய பெருந்தன்மையை அந்தக் கடவுள் கூட முற்றாகக் கண்டாரில்லை" என்று கூறுகின்றான்.

ஞானந் தானுரு வாகிய நாயகன் இயல்பை
யானும் நீயுமாய் இசைத்துமென் றால.்.து எளிதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோனம் தீர்கலா முனிவரும் தேற்றிலர் முழுதும்
தானும் காண்கிலன் இன்னமுந் தன்பெருந் தன்மை.
-சூரன் அமைச்சியற் படலம் 129

எதிர்த்து வந்திருக்கும் முருகப்பெருமானின் வல்லமையை உணர்வதை விட்ட சூரபன்மன், தன்னுடைய வைராக்கியத்தில் மேலும் உறுதி பெறுகிறான். சிங்முகாசுரனைப் பலவாறு இழித்துப் பேசுகிறான். விதியின் வலிமையை உணர்ந்த சிங்கமுகாசுரன் யுத்தத்தை ஆதரிக்கின்றான். போர் தொடங்குகின்றது. போரின் கடுமையையும் எதிரியின் வலிமையையும் உணர்ந்த இரணியன் தேவர்களைச் சிறையிலிருந்து விட்டு முருகப்பெருமானோடு போரைத் தவிர்க்கும்படி வேண்டுகின்றான். கடும் வைராக்கியத்தோடு இருந்த சூரன் அவனைத் திட்டுகிறான். அவன் போருக்குப்போய்த் தோற்று மறைகின்றான். பிறகு பானுகோபன் எதிரியின் பலம் பெரிதெனச் சொல்லிச் சூரனைத் தேவர்களைச் சிறையிலிருந்து விடச் சொல்லிக் கேட்கிறான். சூரனின் வைராக்கியம் மாறவில்லை. அசுரர் குலம் முழுவதும் அழிந்து தனியாக நிற்கிறான் சூரன். இது இரண்டாவது நிகழ்வுத் தொடர்.

மூன்றாவது நிகழ்வுத் தொடர் தொடங்குகிறது.
முருகப்பெருமான் சூரனுக்கு தன்னுடைய அருட்பெரும் வடிவத்தைக் காட்டுகிறார். சூரனுக்கு எதிரியின் வலிமை விளங்குகிறது. விரிந்த மலரால் ஆன மாலையை அணிந்த முருகப்பெருமான் பெரிய போர் செய்தது எல்லாம் திருவிளையாட்டே! அஃதன்றி அப்பெருமான் என்னைக் கொல்ல எண்ணினால் அதைத் தாங்குபவர் எவர்? ஒருவருமில்லை. என சூரன் உணர்கிறான்.

ஏடவிழ் அலங்கல் மார்பன் என்னுடன் இந்நாள் காறும்
நீடிய இயற்போர் ஆற்றி நீங்கலான் நின்ற தெல்லாம்
ஆடலின் இயற்கை யென்றே அறிந்தனன் அஃதான் றன்னான்
சாடிய வேண்டும் என்னின் யாரது தாங்கற் பாலர்
-சூரபன்மன் வதைப் படலம் 446

வைராக்கியம் பிழையானதென்பது சூரனுக்கு நன்கு தெரிந்தது. ஆனாலும் அவன் குலம் முழுவதும் அழிந்துவிட்டது. முன்னர் யுத்தம் தொடங்கிய தேவை முடிந்துவிட்டது. அந்த நிலைக்கு அப்பாற்பட்ட ஒரு நீண்ட காலக் கண்ணோட்டம் தெரிகிறது. தேவர்களின் சிறையை நீக்கி இந்தக் குமரப்பெருமானை வணங்கி இந்த ஊனுடல் பொருந்திய உயிரைக் காப்பாற்றிக் கொண்டு ஏழைகளைப் போன்று இருப்போமேயானால் அது எனக்குத் தக்க செயலோ? ஆயிரம் கோடி அண்டங்களிலுள்ள என்புகழ் மறையாதோ? ஆகவே தொடர்ந்து போரைச் செய்வேன். ஏக முதல்வனாக எழுந்தருளியிருக்கின்ற முருகப்பெருமானின் எதிரில் நான் இன்று போர் செய்தேன். அதனால் நான் இனி மனத்தளர்ச்சி அடையேன். இந்த நல்ல பெருமையைப் பெற்றேன். இதனால் நான் அடைந்த இந்தப் புகழே நிலைத்து நிற்கும். இவ்வுடல் அந்தப் புகழைப்போல் நிற்குமோ? நிற்காது.

ஒன்றொரு முதல்வனாகி உறைதரு மூர்த்தி முன்னம்
நின்றமர் செய்தேன் இந்நாள் நெஞ்சினித் தளரேன் அம்மா
நன்றிதோர் பெருமை பெற்றேன் வீரனும் நானே யானேன்
என்றுமிப் புகழே நிற்கும் இவ்வுடல் நிற்ப துண்டோ
-சூரபன்மன் வதைப் படலம் 448

இவ்வாறு நினைத்த சூரன் தொடர்ந்து யுத்தம் செய்து அழியாப் புகழ் பெற்றான். முருகப்பெருமானுக்கு மயில் வாகனமும் சேவற் கொடியும் ஆயினன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பார்க்கும்போது முதலாம் தொடரில் வைராக்கியம் மிகவும் சிறந்த முடிவுகளைத் தந்ததையும், இரண்டாம் தொடரில் வைராக்கியம் பேரழிவுக்கு இட்டுச் சென்றதையும் மூன்றாம் தொடரில் வைராக்கியம் நிலையான புகழுக்கு இட்டுச் சென்றதையும் காணலாம். இந்த நிலையான புகழ் பெறுமதியானதா என்பது கேள்விக் குறியே. இதனாலேயே வைராக்கியம் நல்ல நோக்கத்தோடு வரும்போது சிறந்த நிகழ்வுகளையும், ஆணவம் சம்பந்தப்படும்போது அழிவுகளைத் தரும் என்பதையும் கந்தபுராணம் தலையாய பாடமாகக் காட்டுகின்றது. அது மாத்திரமன்றி புகழ், அதற்கான வைராக்கியம் உயிரினும் மேலானது என்பது கந்தபுராணம் காட்டும் பாதையாகும்.

# 'கலசம்' நூறாவது இதழ்!

அன்பான கலசம் வாசகர்களுக்கு!

வணக்கம். கடந்த இருபத்தொன்பது ஆண்டுகளாகக் 'கலசம்' என்ற இந்த ஆன்மிகக் காலாண்டிதழ் இலண்டனிலிருந்து வெளிவந்துகொண்டிருக்கிறது. சைவ முன்னேற்றச் சங்கம் (ஐஇ) இதை வெளியிட்டு வருகின்றது. கலசத்தின் நூறாவது இதழ் 2021ஆம் ஆண்டு ஜனவரியில் வந்திருக்கவேண்டும். ஆனால், 'கொரோனா' பெருந்தொற்றின் காரணமாக 2020இல் மூன்று இதழ்கள் வெளிவரவில்லை. பின், இவ்வருடம் (2021) தைப்பொங்கலுடன் கலசம் குழுவினரின் முயற்சியில் மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ளது. அந்த இதழ் இலங்கையிலும் அதே தினத்தில், தைப்பொங்கல் அன்று (14.01.2021) வெளியிடப்பட்டது. தொடர்ந்தும் இனிவரும் இதழ்களை இலங்கையிலும் வெளிடவுள்ளோம்.

'கலசம்' நூறாவது இதழை இந்த ஆண்டுக்கான ஐப்பசி, கார்த்திகை, மார்கழி இதழாக வெளியிடத் திருவருள் கைகூடியிருக்கிறது. அக்டோபர் 2021இல் இது வெளியாகும். எனவே வாசகராகிய உங்களிடமிருந்து கட்டுரைகள் கவிதைகளை எதிர்பார்க்கிறோம். ஆக்கங்கள் ஆங்கிலத்திலும் இருக்கலாம். எல்லா வயதினரும் அனுப்பலாம். இளைய தலைமுறைக்கு முன்னுரிமை வழங்கப்படும். கிடைக்கவேண்டிய கடைசித்திகதி 20.08.2021. இதற்குப் பின் வருபவை அடுத்து வரும் இதழ்களில் பிரசுரமாகும். நூறாவது இதழில் பிரசுரமாகும் தரமான ஆக்கங்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ஆக்கங்கள்:

1. சைவசமயம், பத்தி இலக்கியம், ஆராய்ச்சி சம்பந்தமாக இருக்கவேண்டும். (திருமுறைகள், புராணங்கள் போன்றவை)
2. கையெழுத்துப் பிரதி A 4 தாளில் 6 பக்கம், தட்டச்சில் 4 பக்கத்துக்கு மேற்படக்கூடாது.
3. Bamini/ Akarathi font, size 12, word format இல் இருக்கவேண்டும்.

அனுப்பவேண்டிய விலாசம்:

மின்னஞ்சல்: smsukkalasam@gmail.com

அஞ்சல்: 2 Salisbury Road, Manor Park, London E12 6AB, UK

இலங்கைத்தொடர்பு: V. Sivanarudchelvan, “Siva Akam”, Mirusuvil South, Mirusuvil

**email: svarul@yahoo.co.uk**

பணிவன்புடன்,

'கலசம்' நிருவாகக் குழுவினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98 ஆவது கலசம் இதழ்

# தியானம்

## "லண்டன் அம்பி"

தியானம் என்பதன் பொருள், மனதை அலையவிடாது ஒருமுகப்படுத்தும் செயல் என்பதாம். இந்தச் செயலில் மனம் மூலாதாரம். எனவே தியானம் என்பது என்ன என்பதை முதலில் சற்றே அறிதல் நல்லது. ஒவ்வொருவருக்கும் பிறக்கும்போது மனதில் எண்ணங்கள் எதுவுமே கிடையாது. உள்ளம் களங்கமற்றது. பின்னர் களங்கப்படுவது எதனால்? குழந்தைக்கு எல்லாமே ஆனந்தம். பிறந்த கணத்திலிருந்தே நல்லது - அல்லாதது போன்றவற்றை நுகர்ந்து கொள்கிறது; நுகரப்பட வைக்கிறார்கள். எல்லா விடயங்களையும் உள்ளெடுத்து, மனமென்னும் மூட்டையைக் குவிக்க ஆரம்பித்துப் பற்பல கோடிக்கணக்கில் விவரவங்கியை எழுப்பி அளவற்ற மாடிகளுள்ள பெரும் மனக்கோட்டையை (பெரும்பாலும் குப்பைக்கூளங்களை) மானுடன் கட்டிவிடுகிறான். இக் குப்பையை தூய்மைப்படுத்தல் எவ்வளவு சிரமமானது என்பது கண்கூடு.

மனதைப் பற்றி ஆய்வதற்கே ஒரு முழு நூல் தேவை. மேலே குறிப்பிட்டது ஒரு துகளிலும் துகள். ஒரு இலக்கை நோக்கி எண்ணத்தைத் திசைப்படுத்தல் எவ்வாறு? ஏதாவது ஒரு குறி அல்லது இலக்கு தேவை. அது உருவமாயிருக்கலாம், அருவமாயிருக்கலாம் (விரும்பிய சில சொற்கள் அல்லது மந்திரம் எனலாம்)

"தியான்" (ஆழ்ந்த சிந்தனை) எனும் சமஸ்கிருதச் சொல்லிலிருந்தே உருவனது தியானம் என அறியக் கிடக்கிறது. ராஜயோகம் அல்லது அட்டாங்கயோகத்தின் ஏழாவது படிதான் தியானம் என்பர். குறிப்பிட்ட ஒரு உருவம் அல்லது சொல், சொற்றொடர், ஓசை ஏதாவதொன்றில் சிந்தனையை ஆழ இடையறாது ஒருமுகப்படுத்தி அதனுடன் இணைதலே இதன் நோக்கம். இவ்வாறு இடையறாது உள்நோக்கிச் செயற்படல் மன அமைதிக்கு வழிகாட்டி இறைநிலையை, மோக்ஷத்தை அடைய உதவும். எனவேதான் பலவேறு மதங்களும் இந்த யுக்தியை முக்கியமான தொன்றாகக் கருதுகின்றனர். இவற்றையெல்லாம் விவரமாகத் தனியான பகுதியில் சிந்தித்தல் சிறந்தது.

களங்கமுற்ற கோடிக்கணக்கான எண்ணங்களை உடைய மனம் சலனமற்றிருத்தலாலேதான் மன அமைதி கிட்டும். நிரந்தர ஆனந்தம் பிறக்க வழிபெறலாம். அதற்குரிய வழிதான் தியானம் - மனதை அலையவிடாது ஒருமுகப்படுத்தல். பயிற்சிக்குட்படுத்தப்பட்ட யானை அதனது தும்பிக்கையிலுள்ள சங்கிலின் உதவியுடன் செல்லும்போது ஒரு வழியிலேயே செல்லும். அதுபோல மந்திரத்தின் துணையுடன் உருவ/அருவ சிந்தனையில் ஈடுபடும்போது மனம் பல்வேறு திக்குகளிலும் அலையாது ஒருநிலைப்படும்; வலுப்பெறும். குறிப்பிட்ட ஒன்றை வைத்து, தொடர்ந்து நிலைநாட்டி மனதைத் தூய்மைப்படுத்தலே தியானம் - உள்ளதை(வேறு கருத்துக்கள் புகாதவாறு) உள்ளவாறு அறிய உதவும் கருவி.

தியானம் வெற்றிகரமாக நடைபெற விசேட பயிற்சி அவசியம். ஒரு இணைந்த குருவின் துணை இன்றியமையாதது. அமைதியான சுற்றாடல் உகந்தது. இதற்கென இடம் ஒதுக்கப்பட வேண்டும். அவசரத்தில் தியானம் செய்யவே இயலாது. போதிய நேரம் ஒதுக்கப்படல் வேண்டும். இது ஒவ்வொருவருக்கும் வேறுபடலாம். முறையே கிரமமாக உபயோகிக்க உருத்திராக்ஷம் போன்ற சாதனங்கள் உகந்தன. இறைநம்பிக்கை தியானத்துக்கு இன்றியமையாதது. அது இன்றியும் தியானம் செய்யலாம். ஆனால் இலகுவானதல்ல. உணவுக்கட்டுப்பாடு, உகந்த உடற்பயிற்சி, நல்லொழுக்கம் போன்றவை தியானத்துக்கு அதிசயிக்கத்தகு ஏதுக்களாக அமையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாவடுதுறை ஆலயம்

## பயணக் கட்டுரை

சாவகச்சேரியூர் DR க கதிர்காமநாதன்

ஆவடுதுறை: ஆ = பசு, அடு = நிறைந்த, துறை = காவேரித் தென்கரை. உமாதேவியார் பசுவாக வழிபட்ட தலம். இதனால் கோமுத்தீஸ்வரர் கோயில் எனவும் அழைக்கப்படுகிறது.

சிவபெருமானும் பார்வதியும் சொக்கட்டான் ஆடினர். ஒவ்வொரு முறையும் சிவனே வென்றார். இதனால் வெகுண்டு, சீற்றமடைந்து பார்வதி நிலை தடுமாறினார். இவற்றால் சிவன் அவரை பசுவாய்ச் சபிக்க, பார்வதி இங்கு வந்து வழிபட்டு, பின்னர் ஆட்கொள்ளப்பட்டார்.

**இறைவன் :** கோமுத்தீஸ்வரர் (பசுவுக்கு முத்தி அளித்த இறைவன்) / மாசிலாமணீசுவரர் (மாசு மறுவற்ற ஈசன்)

**இறைவி :** அதுல்யகுஜாம்பிகை / ஒப்பிலாமுலையம்மை

**நந்தி :** தருமநந்தி

**தலமரம் :** படர் அரசு

**தீர்த்தம் :** கோமுத்திதீர்த்தம், பத்மதீர்த்தம், கைவல்யதீர்த்தம்.

**தலவிநாயகர் :** துணை வந்த விநாயகர்.

கோமுக்திநகர், அரசவனம், முத்தி ஷேத்திரம், கோகழி, சிவபுரம், பிரமபுரம், அகத்தியபுரம், தருமநகர், கஜாரண்யம், நந்திநகர், நவகோடி சித்திபுரம் ஆகியவை இத்தலத்தின் வேறு பெயர்கள்.

இவற்றைவிடப் பலவித சிறப்புக்களை இவ்வாலயம் கொண்டுள்ளது. அவை:

1. ஞானசம்பந்தர், தன் தந்தையின் வேள்விக்காக இறைவனிடம் பொற்கிழி பெற்றது.
2. சுந்தரர் உடற்பிணி தீரப் பிரார்த்தித்தது.
3. திருவிடைமருதூரின் பரிவாரத் தலங்களுள் நந்தித்தலமாக விளங்கியது.
4. தேவர்கள் "படர் அரசு" ஆக விளங்க அதன் கீழ் இறைவன் எழுந்தருளியது.
5. திருமூலர் தங்கியிருந்து தவம் செய்து திருமந்திரம் அருளியது.
6. போகசித்தருடைய மாணவராகிய திருமாளிகைத்தேவர் பல அற்புதங்களை நிகழ்த்தியது.
7. சேரமான் பெருமாள் நாயனார் விக்ரம பாண்டியன் ஆகியோர் வழிபட்டது.
8. முசுகுந்தனுக்கு மகப்பேறு அருளி இத்தலத்தைத் திருவாரூராகவும் தம்மைத் தியாகேசராகவும் காட்டியது. (புத்திர தியாகேசர்)
9. சித்தருக்கு அட்டமா சித்திகளை அருளியது.
10. தரும தேவதை இறைவனை வழிபட்டு அவருக்கு வாகனமாகும் பேறுபெற்றது.
11. திருமூலர், திருமாளிகைத்தேவர் முதலிய மகான்களுடைய சமாதிகள் இருப்பது.

**பயணம் :**

2019 ஆம் ஆண்டு இருபத்து ஓராம் நாள், புரட்டாதி முதலாம் சனியன்று காலை சென்னையி லிருந்து மனைவியாரோடு புறப்பட்டுக் கார் மூலம் இவ் ஆலயத்திற்குச் சென்றோம். முதலில் ஒரு வளைவு காணக்கூடியதாக இருந்தது. அதில் "திருவாவடுதுறை ஆதீனம்" என்ற வாசகம் இருந்தது. அதன் இரு மருங்கிலும் பசுவும், பால் குடிக்கும் கன்றும் சிற்பமாக இருப்பதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். உட்சென்றவுடன் கோயில் கொடிமரம் தென்பட்டது. அதன்பின் ஐந்து நிலை கொண்ட கோபுரம்! முன்பு திருவக்கரையில் கோபுரமும், கொடிமரமும் ஒரே நேர் கோடில்லாமல் வக்ரகப்பட்டு இருந்ததும், ஆவுடையார் கோயிலில் கொடிமரம், நந்தி பலிபீடமும் இல்லாமல் இருந்ததும் நினைவுகூர வேண்டியது. இவை யாவும் வாழ்வில் மாற்றம், ஏற்றம், ஏமாற்றம் ஏற்படும் என்ற தத்துவத்தைக் கொடுக்கின்றன.

பத்து ஏக்கர் கொண்டு மூன்று பிரகாரங்களை உள்ளடக்கி திருவாவடுதுறை ஆதீனத்தால் நன்கு பராமரிக்கப்படும் ஆலயம். இரண்டாவது கோபுரம் மூன்று நிலைகளை உடையது. இதன் வாயிலில் பெரிய நந்தி உளது. நந்தி நகர், நந்தி தலம். கறுத்த நந்தி 14 அடி உயரம், 12 அடி அகலம். தஞ்சாவூர் நந்தி 12 அடி உயரம். இதனால் தமிழ் நாட்டிலே தர்ம தேவதையே நந்தியாக விருக்கும் இந்நந்தியைப் பெரிய நந்தியாகக் கருதுகின்றனர். நந்தித்தலம் எனக் கொண்டாடி "வளர்ந்த நந்தியும் படர்ந்த அரசும்" என்ற பழமொழியும் இங்கு பிரபலம். மக்கள் தங்கள் கோ நிரைகள் நோயுற்றால் இந்த நந்தியை வழிபடுவர். இந்த நந்தியின் முன்புறம் ஒரு சிறுநந்தி உளது. இதற்குப் பிரதோஷ வேளையில் அபிடேகம் நடைபெறும். பின்னால் இருக்கும் பலிபீடமே திருஞானசம்பந்தருக்கு இறைவன் பொற்கிழி கொடுத்த இடமாகும்.



இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதோடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே!

இவ்வாறு திருஞானசம்பந்தர் வேண்டி, பாடிப் பொற்கிழி பெற்றார்.

சுயம்புலிங்கமான கோமுத்தீஸ்வரருக்கு அர்ச்சனை செய்தோம். இக்கோயிலில் நவக்கிரகங்கள் இல்லை. சகலவிதமாக விக்கினங்களைத் தீர்க்கும் மாசிலாமணீசுவரர் இருக்கும் போது நவக்கிரகங்களுக்கு இடமேது? விமானம் துவைதளம் என அழைக்கப்படுகிறது. அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. விநாயகர், முருகன், நடராசர், தட்சிணாமூர்த்தி, அகத்தியர், பிரம்மா, விஷ்ணு போன்ற மூரத்தங்களையும் தரிசிக்கலாம்.

முப்பத்து முக்கோடி தேவர்களும் படர் அரசுமரமாக இருக்க, அம்மரத்தின் கீழ்ச் சிவபெருமான் திருநடனம் புரிந்த தலமாகத் திகழ்கிறது.

மூன்று சூரியன்களை ஒருமித்து அங்கு காணலாம். இது ஓர் அரிய காட்சி. ஓரிடத்தில் பார்வதி பசுவாக லிங்கத்திற்கு அபிடேகம் செய்வதைச் சிற்பமாக "ஸ்ரீ கோரூபாம்பிகை" என்ற பெயரில் கண்டு களிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலின் மேற்குப் பிரகாரத்தில் திருமூலரின் ஜீவசமாதி உளது. இது ஒரு சிறு கோயில் போலத் தோற்றமளிக்கிறது. அவரின் சமாதியின் மேல் திருவுருவம் உளது. இதற்குப்பின் திருவாசியும் உண்டு. திருமூலர், முன்பு சுந்தரநாதராகவிருந்தவர். பசுக்கள் அலைந்து கதறுவதைக் கண்டு, அங்கு இடையன் மூலன் இறந்ததை அறிந்தார். பசுக்களுக்கு கருணை கொண்டு, மூலனின் உடலில் புகுந்து பின்னர் இத்தலத்தில் திருமந்திரம் (எமது தமிழ் வேதம்) பத்தாம் திருமுறையாக "மந்திரமாலை" அளித்தார். இங்கு ஒரு ஒற்றுமையைக் கவனித்தல் வேண்டும். பசுவால் கோமுத்தீஸ்வரரும், பசுவால் திருமூலரும் சம்பந்தப்படுள்ளனர். இதே சமயம் நேபாளில் இருக்கும் பசுபதீஸ்வரரையும் நினைவு கூரல் வேண்டும்.

சிவன் ஆலயங்களில் மதிலில் நந்திகள் இருப்பதுண்டு. ஆனால் இங்கு இல்லை. திருமாளிகைத்தேவர், நரசிங்கன் என்னும் மன்னனின் படைகளை, கோயிலின் மதிலிலுள்ள நந்திகளை உயிர் பெறச் செய்து விரட்டினார். இதனால் மதில்களில் நந்திகள் இல்லை என கூறப்படுகிறது.

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலிற்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே.

சிவமங்கை தன் பங்கனாகிய சிவபெருமானைக் கூடியிருந்தேன். சிவனுக்கு சிறப்பாக உடைய திருவாவடுதுறைக்கண் கூடியிருந்தேன். கோயிலின்கண் மேல்பாலுள்ள திரு அரசமரத்து நிழலில் கூடியிருந்தேன். சிவன் நாமம்- "நந்தி நாமம் நமச்சிவாயவே" - திருமூலர்.

கல்வெட்டிலிருந்து புரட்டாதிவிழாவில் ஒருநாள் திருமூலர் நாடகமும், ஆரியக்கூத்தும் நடந்ததாகத் தெரிகிறது. மேலும் 5 ஆம் நாள் திருவிழாவில் ஞானசம்பந்தனுக்கு பொற்கிழி கொடுத்தது. கொண்டாடப்படுகிறது.

"அணைத்து இருந்த நாயகர்" என்பது உற்சவ மூர்த்தியின் பெயராகும். அணைத்து என்றாலும் பக்கத்தில் நிற்பது போல் தோற்றம். தம்பதிகள் இணைந்து இன்புற வழிபடுவர்.

**கோயில் திறந்திருக்கும் நேரம்:**

காலை 7 மணி - 12 மணி மதியம்
மாலை 4 மணி - 8 மணி இரவு

நால்வரால் பாடப்பெற்ற இத்தலத்தை மயிலாடுதுறை, கும்பகோணம் சாலையில் சென்று அடையலாம். நரசிங்கன் பேட்டை சமீபத்திலுள்ள புகையிரத நிலையம் . திருவாலங்காடு பேருந்து நிறுத்துமிடம். கோயில் இவ்விடத்திலிருந்து 1 கி.மீ தூரத்தில் உளது.



**(பி.கு) பிரபல நாதஸ்வர வித்வான் TN ராஜரத்தினம் அவர்களின் பிறந்து, வசித்த இடமாகவும் பெருமை பெற்றது திருவாவடுதுறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருவாவடுதுறை ஆதீனம்:**



இந்த ஆதீனம் முதன்முதற் தோன்றியதும், முதன்மையான ஆதீனமுமாகும். 14ஆம் நூற்றாண்டில் உருவாகி தற்போதும் பல கோயில்களைச் சீராகப் பராமரிக்கும் பீடம். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களை ஆசிரியராகவும், தமிழ் தாத்தா உ.வே, சாமிநாத ஐயர் அவர்களை மாணாக் கராகவும் இன்னும் பல மேதைகளை உருவாக்கியும் பெருமை பெற்ற பேரிடம்.

500 இலும் மேற்பட்ட தமிழ் நூல்களை வெளியிட்டும், காணக்கிடைக்காத அரிய பழைய ஓலைச்சுவடிகளைப் பாதுகாத்தும் வைத்த அமைப்பு. திருமுறை வகுப்புகளை நடத்தி, ஓதுவார்களை உருவாக்கி, "பண்ணிசை செல்வர்" போன்ற பட்டங்களை கொடுக்கும் பாடசாலை.

சைவசித்தாந்த வகுப்புக்கள், குருபூசை விழாக்கள், கும்பாபிஷேகங்கள், யாவற்றிலும் பங்குபற்றி தமிழையும், சைவத்தையும் வளர்த்துக் கொண்டிருக்கும் பாராட்டுப்பெற்ற ஆதீனம். ஆதீனத்தின் பீடாதிபதி அறிவும், ஆற்றலும் உடையவர். சிவதீட்சை பெற்றுத் திரிபுண்டரத்தோடும், தலையிலும், மார்பிலும் உருத்திராட்ச மாலைகளோடும், காவி உடையோடும் தோன்றுகிறார். இவரைச் சிவாசாரியர்கள் வீழ்ந்து வணங்குவர். இத்தகைய பெருமை பெற்றவராவார்.

**நாவலர்பட்டம்:**

நல்லூரில் 18-12-1882 ஆம் ஆண்டு எமது யுக புருஷர் ஆறுமுகம்பிள்ளை என்ற இயற்பெயரோடு பிறந்தார். 9 வயதில் தந்தையாரை இழந்தார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வி கற்று 19 வயதிலேயே அங்கேயே ஆசிரியரானார். இவரின் அறிவையும், ஆற்றலையும் அறிந்த பாடாசாலை நிறுவுனரும் அதிபருமாகிய பேர்சிவல் பாதிரியார் கிறிஸ்தவ விவிலியத்தை (பைபிள்) ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கக் கோரினார். மொழிபெயர்ப்பு யாவராலும் பாராட்டப்பட்டது. சிறந்த சொற்பொழிவாளரான இவர் சைவ சமயத்துக்காக, அதை மீட்பதற்காக கோயில்களைப் புனருத்தாரணம் செய்தார். தனது நாவன்மையால் சைவசமயத்தை இலங்கையில் மேலோங்கச் செய்தார். இவரின் சொற்பொழிவைக் கேட்டு அதன் ஆழத்தையும் அறிவாற்றலையும் கண்டு வியந்து, அதிசயித்து, மகிழ்ந்து, ஆனந்தமடைந்து போற்றி "நாவலர்" என்ற பட்டத்தைத் திருவாவடுதுறை ஆதீனம் இவருக்குச் சூட்டியது. இதுவே நிலைத்து நின்று எமக்கு மாத்திரமன்றி யாழ்ப்பாண மத்திய கல்லூரிக்கும் பெருமை தேடியது.

பெரியபுராணம் எனது வலதுகண், திருவிளையாடல் எனது இடதுகண், கந்தபுராணம் நடுக்கண் என்று அடித்துக்கூறியவர் நாவலர். கந்தபுராணம் என்றால் யாழ்ப்பாணம் என்ற நிலைக்கு வித்திட்டவர் தனது 57 வயதில் இறைபதம் அடைந்தார். நாவலர் என்ற அழியாப் பட்டத்தைக் கொடுத்த திருவாவடுதுறை ஆதீனத்தை மறத்தல் கூடாது. திருவாவடுதுறை சென்று ஆதீன மண்ணை மிதித்து உள்ளிருக்கும் கோமுத்தீஸ்வரரைத் தரிசித்து எமது நன்றியை செலுத்துவதுதான் எமது கடமை என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயம்புவாகத் தோன்றிய கொக்கட்டிச்சோலை சிவாலயம்

சைவப் புலவர் சுந்தரமூர்த்தி துஷ்யந்த் BA(HONS),MA

**அறிமுகம்:**

தொன்று தொட்டுச் சைவமும் தமிழும் குழுமி வளர்ந்த ஈழத்துப் புண்ணிய பூமியிலே, பால், தயிர், தேன், பாடும் மீன் என்பவற்றுக்குப் புகழ் பெற்ற மட்டக்களப்பு தேசத்தில் வரலாற்றுச் சிறப்பும், தொன்மையும் மிக்க புகழ் பூத்த முதன்மையான சிவாலயமாகக் கொக்கட்டிச் சோலை தான் தோன்றீஸ்வரம் விளங்குகின்றது. இப்பதி மட்டு நகரிலிருந்து தெற்கே மண்முனைத் துறையினூடாகச் சுமார் 13 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. கொக்கட்டி மரங்கள் நிறைந்த சோலையில் சுயம்புலிங்கமாக மூர்த்தி எழுந்தருளி உள்ளமையால் இப்பதிக்கு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் என்ற நாமம் உரித்தாகிற்று என்பர்.

**தலவரலாறு:**

இப்பதியின் வரலாற்றினைப் பற்றிப் பல கர்ணபரம்பரைக் கதைகளிலும், கல்வெட்டுத் தகவல்களை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்ட மட்டக்களப்பு மான்மியம் எனும் வரலாற்று நூலிலும் இருந்து அறியக் கூடிய செய்திகள் உள்ளன. திருமூலர் இலங்கைத் திருநாட்டைச் “சிவபூமி” என்று சிறப்பித்தமைக்கு ஏற்றாற் போல் கிழக்கிலங்கையிலும் சிவலிங்க வணக்கமே காலூன்றிக் கிடந்துள்ளது. அதற்கமைய, கொக்கட்டி மரக்காட்டுச் சூழலில் தான்தோன்றியாய் அமைந்த லிங்கத்தை வேடர்கள் கொத்துப் பந்தலிட்டு நீண்ட காலமாய் வழிபட்டு வந்தனரென்பது நெடுங்காலச் செவிவழி மரபுக்கதையாகும். இது செவிவழி மரபுக்கதையாக இருப்பினும், தொன்மைக் காலத் திராவிடர்களின் கொடிநிலை, கந்தழி, வள்ளி வணக்க முறையின் எச்சமே; கொக்கட்டி மர அடியில் உருவான சிவலிங்க வழிபாடே பின்னாளில் திருத்தலமாக உயர்வு பெற்றது என்பதை ஊகித்துக்கொள்ள முடிகின்றது. இவ் வரலாற்றினைக் கொக்கட்டியார் மரபோடு திருவேட்டைக் காவியம் தொடர்பு படுத்திக் கூறுகின்றது. “கதிரமலையைத் தரிசிக்க முத்துலிங்கர், கொக்கட்டியர் என்ற இரு தபோதனர் புறப்பட்டனர். அவர்களில் கொக்கட்டியர் சிவபதமடைய, அவரைச் சமாதியிருத்தி, முத்துலிங்கர் கதிரமலையைத் தரிசிக்கச் சென்றார். பின்பு அச்சமாதியிலிருந்து ஒரு லிங்கம் வெளிப்பட்டு, அது கொக்கு நெட்டிமரம் ஒன்றினால் மறைக்கப்பட்டிருந்தது. தேன் பெறச் சென்ற வேடன் அம்மரத்தை வெட்ட இரத்தம் சிந்தியது. இதைச் சொப்பனத்திலறிந்த கதிர்காம யாத்திரிகரில் ஒருவரான செட்டியார் கோயில் திருப்பணி களைப் பூர்த்தி செய்து கொடுத்ததன் பின்னர் வேடர்கள் பூசை செய்து போற்றிய தலமே கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் ஆயிற்று” என்று கூறப்பட்டிருக்கின்றது.

மேலும் மட்டக்களப்பு மான்மியத்தில் வரும் “பெரிய கல்வெட்டு”ப் பாடலில் மண்முனைப் பிரதேசத்தை ஆட்சி புரிந்த உலகநாச்சி என்னும் அரசியால் அமைக்கப்பட்ட இரு சிவாலயங்களுள் ஒன்று கொக்கட்டிச்சோலை கோயில் என்று கூறப்படுகின்றது. மேற்படி கூறப்பட்ட தகவல் மகாவம்ச நூலிலும் ஒத்துக்கிடக்கின்றது. பெரிய கல்வெட்டுத் தகவலின்படி “ஒரிஸா” நகரத்திலிருந்து அநேக குடும்பங்களை அழைத்து வந்து, காப்பு முனைக்காட்டை அழித்துச் செப்பனிட்டுக் குடியேற்றி அப்பதிக்கு அரசியாகி மன்முனை யென நாமஞ்சூட்டி வாழுங்காலம் காப்பு முனைக்குத் தென்பாகமாயுள்ள காடுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்கும் போது, திகடன் என்பவன் கொக்கட்டி மரத்தை வெட்ட உதிரம் பாய்ந்தது. அதைக் கண்ட திகடன் தனது துகிலால் மரத்து வெட்டு வாயைக் கட்டி வைத்துவிட்டு, வந்து உலக நாச்சியிடம் செய்தியைக் கூறினான். உலக நாச்சியும் அந்த இடத்திற்குச் சென்று பார்த்த போது மரத்தடியில் ஒரு லிங்கம் இருந்தது. மற்றவர் கண்ணுக்கு அது புலப்படாத படியால் உலகநாச்சியும் சிவலிங்கமெனத் திட்டஞ்செய்து அவ்வனத்தை அழிப்பித்தாள். பின் தூசிநீக்கி, ஆலய மியற்றி, வடநாட்டுக் கொல்லடத்தி லிருந்து பட்டர் மூவரை வரவழைத்துப் பூசை புரியும்படி திட்டஞ்செய்தாள், அதிக கழனிகள் திருத்திக் குணசிங்கனுடன் பிறந்தானாகிய கிரசரன் என்பவனை மணந்தாள். அதன் பயனாய் ஒரு புத்திரனையும் ஒரு புத்திரி யையும் பெற்று வாழ்ந்து வருங்காலம், தந்த புரத்திலிருந்து ஆரந்தொடுக்குங்குடிகள் பதின்மரையழைத்துத் தனது பதிக்கு அருகாய் இருத்திப் பத்தன் என்பவனை அவர்களுக்குத் தலைவனாய் வைத்து இரண்டு ஆலயங்களுக்கும் ஆரங்கட்டுங் குடிகளாய் வகுத்தனள்" என்று கூறப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட பெரிய கல்வெட்டெனும் ஏட்டில் தருமசிங்கன் என்பவனே இவ் ஆலயத்தைக் கல்லினால் கட்டினான் என்ற குறிப்பை இவ்வாறு தருகின்றது. "மட்டக்களப்பு நாட்டின் நிதியதிபனாகிய இலங்கைச் சிங்கனுக்கும் மனைவி சோபன முத்துவுக்கும் மகனாகத் தருமசிங்கன் என்பவன் கலிபிறந்து மூவாயிரத் தெண்ணூற்றெண்பத்தைந்திற் பிறந்தான். வளர்ந்தபின் மட்டக்களப்பின் நதியதிபனும் வீரம் மிக்க படைத்தளபதியுமாகிய இவன் தொப்பாவை அரசன் சேனனது புத்திரி பவளமுத்து என்பவளை மணமுடித்தான். இவனுக்கு நீண்ட காலமாகப் புத்திரரில்லாத குறையை நீக்கக் கருதிக் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தைக் கல்லினாற் கட்டி அந்தணர் பத்ததியின்படி மதில் மண்டபங்களுமியற்றி மூன்று இரதங்களுஞ் சோழதேசமிருந்து அழைப்பித்து அபிஷேகங்களுஞ் செய்து சிறைக்குடிகளும் வகுத்தான்". இதன்படி சுமார் *1050* வருடங்களுக்கு முன் கட்டப்பட்டதென்பது சான்றாகும்.

**புல் உண்ட கல் நந்தி அதிசயம்:**

போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றி கிழக்கில் ஆதிக்கம் செலுத்திய காலகட்டத்தில் பல சைவாலயங்கள் இடித்தழிக்கப்பட்டன. இந்நிலையில் இந்த ஆலயத்தையும் போர்த்துக்கேயர் முற்றுகையிட்டனர். அப்போது, இந்த ஆலயத்தைச் சுற்றிப் பார்த்த போர்த்துக்கேயத் தளபதி கல்லில் செதுக்கிய நந்தியைக் கண்ணுற்று, இந் நந்தி புல் தின்னுமா என்று குருக்களிடம் வினாவினான். அதற்கு குருக்கள் இந் நந்தி ஒரு நாளைக்கு ஒரு தடவை தான் புல் தின்னும் எனக்கூற, தளபதி நாளை வருகின்றேன் என்று கூறி மறுநாள் வந்து நிற்க குருக்கள் நந்திக்கு புல் கொடுக்க அது உயிர் பெற்று எழுந்து புல்லை உண்டு பின் சாணம் போட்டு அதன்பின் மீண்டும் கல் நந்தியானது. இதனைக் கண்ணுற்ற தளபதி இந்த ஆலயத்தை அழிக்காது விட்டான் என்று இன்றும் செவி வழிக்கதை உணர்த்துகின்றது. இதற்குச் சாட்சியாக இன்றும் அந்த நந்தி காட்சி தருகின்றது.

**கட்டட அமைப்பு:**

இக் கோயிலில் காலத்துக்குக் காலம் திருப்பணி வேலைகள் நடைபெற்று வந்துள்ளன. அதனால் அதன் கட்டட அமைப்பும் ஏனைய நுண்கலை மரபுகளும் அவ்வப்போது மாற்றமடைந்துள்ளன. இவ் ஆலயக் கட்டட அமைப்பினை நோக்கும் போது அது பாண்டியர் காலப் பாணிமுறையில் அமைந்ததென்று பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். தொல்லியல் ஆய்வாளர் க. தங்கேஸ்வரி அவர்களின் கூற்றுப்படி ஆலயத்தின் கர்ப்பக்கிருகம், அந்தராளம், அர்த்தமண்டபம் என்பன பாண்டியர் காலத்திற்குரியது என்கிறார். எனவே இவ் ஆலயத்தின் நிலையான கட்டடம் கி.பி. *11* ஆம், *12* ஆம் நூற்றாண்டு காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டதாக இருக்க வேண்டும் எனக் கருத முடிகின்றது. பழைய ஆலயத்தில் இரண்டு சுற்றுமதில்கள், சிவன் கோயிலுடன் சேர்ந்து வடக்கில் அம்மன் கோயில், விநாயகர் கோயில், முருகன் கோயில் என்பனவும் இருந்தன. *1978* ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியால் பாதிப்படைந்த இக்கோயிலில் பரிவார தெய்வங்களுக்கான ஆலயங்கள், இராசகோபுரம், மணித்தூண்கள் என்பன புதிதாக அமைக்கப்பட்டு *1998* ஆம் ஆண்டு குடமுழுக்கு இடம் பெற்றது. அதன் நினைவாகத் "தேரோட்டம்" எனும் சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. கோயிலின் விமானம், கோபுரம் ஆகிய உறுப்புக்களில் சிற்பாகம விதிமுறைகளைத் தழுவிய சிற்பங்களும், மண்டபச் சுவரில் தல வரலாற்றுடன் தொடர்புடைய அழகான ஓவியங்களும் தீட்டப்பட்டுள்ளன. கோயிலின் தேரோட்ட நிகழ்விற்கு சித்திரத்தேர், பிள்ளையார் தேர் என இரண்டு தேர்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

**பூசைகளும் விழாக்களும்:**

நாள் தோறும் மூன்று வேளை நித்திய பூசையும், விசேஷமாக சுக்கிரவாரப் பூசையும் நிகழ்ந்து வருகின்றது. கோயிலின் வருடாந்த உற்சவம் ஆவணி உத்தரத்தில் கொடி ஏற்றப்பட்டுப் பூரணையை அடுத்து ஞாயிறு தேரோட்டமும், மறுநாள் தீர்த்தோற்சவமுமாக *16* நாள்கள் திருவிழாக்கள் நடைபெறும். தேரோட்டத்தை அடுத்து மறுநாள் அதிகாலை திருவேட்டை நிகழ்ச்சி நடைபெறும். அதில் திருவேட்டைப்பதிகம் பாடப்படும். அதனைத் தொடர்ந்து மட்டுதேசத்தில் வாழும் ஏறத்தாழ *140* சாதிப் பிரிவுகளுக்கும் திருக்குடுக்கை (முட்டி) வழங்கிக் கௌரவிக்கும் திருவருட் பிரசாத நிகழ்வு நடைபெறும். இவை கலிங்கமோகன் வகுத்த சட்டமாகும். இதனாலேயே இக்கோயிலைத் "தேசத்துக் கோயில்" என்றும், "திருப்படைக்கோயில்" என்றும் புகழ்ந்து பேசுவர். இவை தவிரத் தைப்பொங்கல், மாசிமகம், சிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு, ஆனி உத்தரம், ஆடி அமாவாசை, திருக்கார்த்திகை, பெருங்கதை விரதம், திருவாதிரை ஆகிய விழாக்களும் விரதங்களும் அனுட்டிக்கப்பட்டு வருகின்றன. மற்றும் இப்பிரதேச மக்களின் வாழ்வியலோடு தொடர்புபட்ட புதிரெடுத்தல், புதிருண்ணல், கறியமுது படையல், மழை வேண்டி அமுது செய்தல் முதலிய காரியங்களையும் இந்த ஆலய வழிபாட்டுடன் தொடர்புபடுத்தி நீண்டகாலம் புரிந்து வருவதையும் காணலாம். இங்கு சங்கமர் என்னும் வீரசைவ மரபில் வந்த குருக்கள்மாரே பூசைகளை நிறைவேற்றி வருகின்றார்கள். பொதுவாக இந் நடைமுறை நெடுங்காலமாக கைக்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**மாகோன் வகுத்த வன்னிமை:**

இந்த ஆலயத்திற்குக் குளக்கோட்டன், விமலதர்ம சூரியன், விக்கிரமசிங்கன் போன்ற மன்னர்கள், உலகநாச்சி எனும் அரசி போன்றவர்கள் ஆதரவு பல நல்கியிருந்தாலும், குளக்கோட்டன் குறிப்பாகத் திருகோணமலைப் பிரதேசத்தில் பல திருக்கோயில் திருப்பணிகள் புரிந்தது போல மட்டக்களப்புத் தேசத்துக் கோயில்களுக்கு மாகோன் புரிந்த மகத்தான பணிகள் தலை சிறந்தவை. மட்டக்களப்பு மான்மியம் என்னும் நூலில் வரும் குளிக்கல்வெட்டு, பெரியகல்வெட்டு, பங்குகூறும் கல்வெட்டு, சாதித்தெய்வ கல்வெட்டு, ஆசாரிகள் கல்வெட்டு முதலிய பாடல்களில் மாகோன் நிர்ணயித்த நடை முறைகள் விளக்கப்படுள்ளன. "முற்குகர் வன்னிமை" என்ற பகுதியில் கொக்கட்டிச்சோலைக்கு ஏற்படுத்திய ஆலய நடைமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

"சீர்தாங்கு வில்லவரும் பணிக்கனாரும்
சிறந்த கட்டிலான், தனஞ்சயன்றன்
கார்தாங்கு மாளவன், சங்கு பயத்தன்
கச்சிலாகுடி முற்குகரின்
மேழேகாண்".

முற்குகரின் ஏழு குடிகளான, வில்லவன், பணிக்கன், சட்டிலான், தனஞ்சயன், மாளவன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்குபயத்தன், கச்சிலான் ஆகியோர் ஆலய நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர்கள். இவர் களின் நடைமுறை இன்றுவரை கடைப் பிடிக்கப்பட்டு வருவதையும் அவதானிக்கலாம். கோயிலின் அன்றாட நடைமுறைகளைச் செயற்படுத்துவதற்கு முற்குவர் குல வண்ணக்கர் மூவர் தொன்று தொட்டு நியமிக்கப்பட்டு வருகின்றனர். எல்லாச் சாதியினருக்கும் கோயிலில் ஊழியம் (திருத்தொண்டு) செய்வதற்கும் திட்டம் வகுத்திருந்தான்.

"சொல்லரிய விளக்கேற்றல், பூவெடுத்தல், தூசகற்றல், சாணமிடல், அணிவிளக்கல், நல்ல மலர்மாலை கட்டல் ------------"

என்ற நீண்ட கல்வெட்டுப்பாடல் இதற்குச் சான்றுரைக்கின்றது.

**தல இலக்கியங்கள்:**

இத் தலத்தின் வரலாறுகளையும் அதன் கீர்த்தியினையும் உள் கிராமக் கவிஞர்களும், புலவர்களும் பல சிற்றிலக்கிய வடிவங்களில் படையலிட்டுள்ளனர். அவற்றுள் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை பாடிய தான்தோன்றி ஈசுரர் திருப்பதிகமும் (1970), க. உ. சின்ன வப்புலவர் 1950 இல் பாடிய திருப்பதிகமும் குறிப்பிடத்தக்கவை. மேலும் கொக்கட்டிப் பதியான் மீது திருவூஞ்சல், கும்மி, காவடிச்சிந்து ஆகிய சிற்றிலக்கியங்களும் பாடப்பட்டுள்ளன. மேலும் நாட்டார் இலக்கியக் கூத்துக்களின் காப்புச் செய்யுளில் இத்தலமும் அதில் பள்ளி கொள்ளும் சுயம்பு ஈசுவரரும் போற்றப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

**நிறைவுரை:**

ஈழத்தின் பழைமை மிக்க சிவ ஈஸ்வரங்களில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரமும் ஒன்று. கிழக்கிலங்கை மக்களின் தேசத்துக் கோயிலாகவும், திருப்படைக் கோயில்களில் மூத்த கோயிலாகவும் இது அடையாளம் பெற்றுள்ளது . இலங்கையில் தான்தோன்றி ஈசுவரங்கள் இரண்டு உள்ளன. அவற்றுள் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள ஒட்டுசுட்டான் தான்தோன்றீசுவரம் ஒன்று. மற்றையது மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள கொக்கட்டிச்சோலை தான் தோன்றீசுவரம் என்பது சிறப்பு. அதுதவிர, மட்டுநகரில் தேரோடும் முதற் சிவாலயம் என்ற பெருமையையும் கொண்டுள்ளது. வீர சைவ தமிழ்மரபை நீண்டகாலம் தொட்டு விளக்கி நிற்கும் ஆலயமாகவும் விளங்கி நிற்பதையும் காண முடிகின்றது.

# இது தமிழ்!

யாழ்ப்பாணத்துக்குச் சென்றுவந்த எங்கள் தமிழறிஞர் ஒருவர் என்னிடம் சொன்னது. அவர் பிரயாணம் செய்த ரயில் வண்டியில் எதிர் இருக்கையில் அமர்ந்திருந்த ஒரு யாழ்ப்பாணத்துத் தாய் தன் மடியில் இருந்த சிறு குழந்தைக்கு ஜன்னல் ஊடாக நிலவைக் காட்டி, 'என்ன வடிவான நிலவு அங்கே பார்' என்று சொன்னாராம். அவர் அதிர்ந்துபோனாராம்.

**"அழகு என்பதற்குச் சரியான தமிழ் 'வடிவு' என்பதே. ஏனென்றால் வடிவம் ஒன்றிலிருந்து தோன்றுவதால் அது வடிவு. அது பண்புப் பெயர்.** அந்த உயர் தமிழைத் தாய் பயன்படுத்தியபோது மடியில் இருந்த குழந்தை விளங்கிக்கொண்டு நிலவைப் பார்க்கிறது. நான் வியப்போடு அதைப் பார்த்தேன்" என்று என்னிடம் சொன்னார்

உடனே நான் அவருக்கு, "அவள் தமிழிச்சி. அவர்கள் தமிழர்கள். அவர்களின் இலக்கண நூலாகக்கற்பிக்கப்படுவது தொல்காப்பிய வழி வந்த இலக்கணம். அதனால் அந்த மக்கள் உயர்வான தமிழைப் பேசுகிறார்கள்" என்று சொன்னேன்.

**- ஒரு உரயையாடலின்போது அறிஞர் மு வரதராசனார் சொன்னது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரன் நாமமே சூழ்க!"

## அநுஜா

உலகத்திலுள்ள மக்கள் மட்டுமின்றி எல்லா உயிர்களும் இன்பமாக வாழவே ஆசைப்படுகின்றன. இன்பமாக வாழ்வதற்கு உடல் நலமும் மன நலமும் அவசியம். இன்றைய காலகட்டத்தில் மக்கள் இவை இரண்டும் இன்றி அல்லற்படுகின்றனர். காரணம், உலகளாவிய நிலையில் விஸ்வரூபம் எடுத்துநிற்கும் 'கொரோனா' என்னும் தொற்றுநோயாகும். கொரோனா தந்த முடக்கம் ஓடித்திரிந்த மனிதர்களை ஓரிடத்தில் அடக்க ஒடுக்கமாக அமர வைத்துள்ளது. இந்நிலை ஏன், எப்படி ஏற்பட்டது என மனித குலத்தைச் சிந்திக்க வைத்துள்ளது. இதன் பலனாக மக்களின் வாழ்க்கை நல்ல வழியில் திசைதிரும்பும் என்று நம்பப்படுகிறது. வாழ்க்கையின் பொருளைப் புரிந்துகொண்டு மனிதர்கள் வாழ்வதற்கு வழிவகுக்கவேண்டும் என்று மனிதநேயம் மிக்கவர்களைப் பிரார்த்திக்க வைத்துள்ளது.

காலத்துக்குக் காலம் இவ்வுலகில் மகான்கள், சான்றோர்கள், சித்தர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் எனப்பலர் அவதரித்தார்கள். துயரின்றி, நோயின்றி மக்கள் எவ்வாறு வாழலாம் என்று வழிகாட்டினார்கள். நிம்மதியாகவும் அமைதியாகவும் எப்படி வாழலாம் என்று வாழ்ந்து காட்டிளார்கள். அவர்களைப் பின்பற்றி வாழ்ந்து, பிறந்த பயனைப் பெறுவது எப்படி என்று பல நூல்களையும் எழுதி வைத்தார்கள். அப்படி வாழ்ந்த பல மகான்களுள் ஒருவர் நூறாண்டு காலம் எம்முடன் வாழ்ந்த காஞ்சி மகாபெரியவர் அவர்கள். தெய்வத்தின் குரல் என்ற நூலில் அவர் பின்வருமாறு கூறுகிறார்.

"கடந்த ஐம்பது ஆண்டுகளில் ஏற்பட்ட மாறுதல்கள் முன்பைவிட அதிகம் என்றே சொல்லலாம். இந்த ஐம்பது வருஷ மாறுதல்களிலிருந்து நமக்கு ஏற்பட்ட அநுபவம் மிகப் பெரியது. இவ்வளவு அநுபவங்களிலிருந்து ஒரு விஷயம் மட்டும் தீர்மானமாகத் தெரிகிறது. மனிதர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு பகவானிடத்திலிருந்தும் தர்ம நூல்களிடத்திருந்தும் விலகுகிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள் என்று கண்கூடாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம். விஞ்ஞானத்தின் அபரிமித அபிவிருத்திக்குப் பிற்பாடு இன்று சர்வதேசத்திலும் ஒரு தத்தளிப்பு, நிம்மதியின்மைதானே அதிகரித்துள்ளது. அறிவுச்சக்தியோ, பௌதீக ஆற்றலோ அதிகப்பட அதிகப்பட உலகத்துக்கு ஆபத்தும் அதிகரிக்கிறது என்று நன்றாகத் தெரிகிறது. மக்களுக்கு உண்மையான நலன் நம்மை விட்டுப்பிரிய முடியாத உறவினனான ஆண்டவனிடம் அன்பு செலுத்துவதனாலேயே வளரும். பத்தி போனதிலிருந்து ஷேமமும் போய்விட்டது என்பதே ஐம்பது ஆண்டுகளில் நமக்கு ஏற்பட்ட அநுபவத்தின் சாரம்" என்று குறிப்பிடுகிறார் அவர். எனவேபக்தி மார்க்கத்தைப் பரப்பும் கழகங்களே இப்போதும் எப்போதும் அவசியம். நாம் எல்லோரும் முனைந்து முயற்சி செய்து ஈசனருள் துணைகொண்டு இப்பணியை முடித்தாகவேண்டும். இதனால் நாமும் நாடும் மக்களும் சீர்பட்டு நாடே அன்புமயமாகும். "வையகம் துயர் தீரும்" என்ற நமது வேதநெறியின் சிறப்புக் கொள்கை புத்துயிர் பெற்று நிலவும். இப்பணிக்கு நம் ஆயுளை அர்ப்பணிக்கவேண்டும் என்று கூறுகிறார் உலகத்தை வாழவைக்கவென்றே அவதரித்த காஞ்சிமகா பெரியவர். மக்களாகிய நாம் முழுமையாக அவரிட்ட பணியை நிறைவேற்றாததால் இன்றைய கீழான நிலையை மனித சமுதாயம் எட்டியுள்ளது; துயருறுகிறது என்று எண்ணத்தோன்றுகின்றது.

வையகம் துயர் தீர்வதற்கு எவை அவசியம் என்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பக்தி மார்க்கத்தை நிலை நிறுத்தத் தோன்றிய ஞானக் குழந்தையாகிய திருஞானசம்பந்தரும் "வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர்" என ஆரம்பிக்கும் தேவாரத்தில், வையகம் துயர் தீர்வதற்கு அரன் நாமமே ஓங்கவேண்டும் என்று கூறியுள்ளார். அதற்குக் காஞ்சிப் பெரியவர் கூறும் விளக்கம், "அந்தணர் வாழ்க!" என்பது யாகங்களை வேத நெறிப்படி செய்து வையகம் துயர் தீர உதவியாகப் பிராமணர்கள் இருப்பதால் அப்படி வாழ்த்தினார். அந்த வேத நெறிப்படி கருமம் செய்யாத அந்தணர்களுக்கு இந்த வாழ்த்து இல்லை என்று கூறுவதுடன் வேடிக்கையாக, தானும் அவர்களுக்கு வக்காலத்து வாங்க வரவில்லை எனக் கூறுகிறார்.

திருமூலரும், திருமந்திரத்தில், ஆலயங்களில் நித்திய பூசைகள் யாகங்கள் சரிவர நடை பெறாவிட்டால் நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்படக்கூடிய கஷ்டங்களை திருக்கோயில் என்ற தலைப்பின் கீழுள்ள பாடல்களில் (515 - 519) தெளிவாகக் கூறுகிறார்.

ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே

முன்னவ னார்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுந்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே

சைவசமயம் வாழ்க்கைக்கு நன்னெறியையே காட்டுகிறது, மக்களை வழிநடத்துகிறது. உணவுப்பழக்கம், சுத்தம் பேணுதல், பஞ்சமா பாதகங்களைத் தவிர்த்தல் என்பன அந்த நன் னெறிகளுள் அடங்கும்.

இன்றைய காலகட்டத்தில் உலகளாவிய அளவில் மக்கள் அநுபவிக்கும் துன்பத்துக்கு அடிப்படைக் காரணியாக இருப்பது சமய நெறிமுறைகள் சரிவரப் பின்பற்றப்படாமை என்பதும் மக்கள் மனதில் தூய பக்தி இல்லாமை என்பதும் ஆகும். கச்சியப்ப சிவாசாரியாரும் "வான்முகில் வழாஅது பெய்க" என்னும் புராணத்தில் "நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவநிதி விளங்குக உலகமெல்லாம்" என்று முடிக்கிறார். குறைவிலாது உயிர்கள் நலமாக வாழ எவை எவை செய்யப்படவேண்டும்? "மந்திரத்தால் மாங்காய் விழாது" என்பதுபோல முயற்சி இல்லாமல் எதுவுமே நடக்காது. விஞ்ஞானத்தால் ஏற்பட்ட மயக்கத்தில் மக்கள் நிரந்தர நிம்மதியும் பேரின்பமும் எங்கே கிடைக்கும் என்பதை தேடிப் பெறத் தவறிவிட்டனர். இதனாலேயே இன்றைய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மருத்துவர்கள், விஞ்ஞானிகள் செய்வதறியாது திகைத்துத் தடுமாறினர். ஆனால் இறைபக்தி உள்ளவர்கள் ஆன்மிக வாதிகள் அலட்டிக்கொள்ளவில்லை. எல்லாம் இறைவனின் திருவிளையாடலே என்றுணர்ந்து அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

மதங்கள் யாவுமே மனதைப் பண்படுத்தும் வகையில் அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டுள்ளன. இந்து மதத்தைத் தவிர ஏனையவை ஒரு குறிப்பிட்ட வழியையே வலியுறுத்துகின்றன. ஆனால் இந்து மதம் பல்வேறு வழிவகைகளைக் கூறுகிறது. ஒவ்வொருவரும் தத்தமக்குப் பொருத்தமான, இலகுவான வழியைப் பின்பற்றலாம். திருமூலர் சுருக்கமாக அன்பும் சிவமும் இரண்டல்ல ஒன்றே என்று கூறிவிடுகிறார். மனதில் உண்மையான அன்பு இருக்குமானால் மற்றெல்லா உயர்ந்த குணங்களும் (இரக்கம், கருணை, கோபமின்மை, பொறுமை) தானாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிடும். இன்றைய நிலையில் மக்களிடம் மற்றவர்களை நேசிக்கவேண்டும் என்ற உணர்வு அருகி வந்துவிட்டது. மக்களின் தேவைகள் அதிகரித்துவிட்டன. அதனை நிறைவு செய்யும் முயற்சியில் ஆலாய்ப் பறப்பதால் எது உண்மையான தேவை என்பதைச் சிந்திக்க மனிதர்கள் மறந்துவிடுகின்றனர். ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்ற ஆன்றோர் வாக்கை நினைக்க நேரமில்லை. தேவைகளைக் குறைப்பதால் பணம் மிச்சம்; நேரம் மிச்சம்; மன உளைச்சல் மிச்சம்; நிம்மதி நிறைவு அதிகம். இதனைப்பற்றிக் காஞ்சிப் பெரியவர், “அவரவர் தம் கடமையைச் செய்துகொண்டு தேவைகளைக் குறைத்து மனசினால் நிறைந்து சுபிட்சமாக இருக்க சந்திரமௌலீசுவரர் அநுக்கிரகம் செய்வாராக!” என்கிறார். என்னே பெரியவரின் பெருங்கருணை! இப்படி எத்தனையோ மகான்கள் அருளிச்செய்த அமுதம் போன்ற பேரருட் செல்வத்துக்குச் சொந்தக்காரரான நாம் அதனருமையை உணராது அல்லற் படுகிறோம் பெருஞ் செல்வந்தர்களின் பிள்ளைகளுக்கு பணத்தின் அருமை தெரிவதில்லை. அதுபோலத்தான் இன்றைய உலகில் மக்கள் இறைவனருளால் எமக்குக் கிடைத்த வாழ்வைப் பயனுற வாழத்தெரியாது அல்லற்படுகின்றனர். மனிதர்களின் மனக் கவலையை எப்படிப்போக்கலாம் என வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்:

தனக்குவமை இல்லாதான் தாளசேந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது (குறள் 7)

இறைவனைப் பணிந்தேத்தி குறையின்றி நிறைவாக உலக மாந்தர் வாழ்ந்திடுக! . உயர்வுறுக!

❄❄❄❄❄❄❄

# நினைவில் நிற்பவை!

## முருகன் தொண்டர் திரு சபா மகேசன்

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் இந்தியாவில் இருந்து வாராவாரம் வெளிவந்த “கல்கி” சஞ்சிகையில், 1960,1965 களில் “கந்தன் கருணை” என்ற தலையங்கத்தில் கந்த புராண படலத்தை எழுதிவந்தார். அடியேனும் அதைப்படித்து வந்திருக்கின்றேன். அதில் சில முக்கியமான விடயத்தை தெரிவிக்க விரும்புகிறேன்.

சூரபத்மன் என்ற அரக்கன், தேவர்களையும், முனிவர்களையும் சிறையில் இட்டும் சித்திரவதை செய்தும் கஷ்டப்படுத்திவந்தான். இதனைப் பக்தர்கள் எல்லோரும் முழுமுதற் கடவுளான சிவ பெருமானிடம் முறையிட எம்பெருமான் இதைத் தடுப்பதற்கு திருமுருகனைத் தோற்றுவித்தார் என்று படித்துள்ளேன்.

இலங்கையில் கதிர்காமம் என்ற இடத்தில்தான் இந்தச் சூரனின் அட்டூழியங்கள் நடந்தன என்றும், சிவபெருமானின் கட்டளைப்படி திருமுருகன் திருச்செந்தூரில் இருந்து கடல்வழியாகத் தனது படையினருடன் இலங்கைக்குப் புறப்பட்டு போகும் பொழுது கடல் பிரிந்து வழிவிட்டதாகவும், பெரிய பெரிய இராட்சத இனங்கள் எல்லாம் வழிபட்டு ஒதுங்கி நின்றதாகவும் வாரியார் எழுதியிருக்கின்றார்.

இலங்கையில் கதிர்காமத்தில் வந்து இறங்கிய முருகையனுக்கு ஒரு மனை ஆக்கப்பட்டது. அங்கு நின்ற வீரவாகு தேவரிடம், இந்த மனையின் வாசலுக்குத் திரை ஒன்று இடும்படி முருகன் சொன்னாராம். அதற்கு வீரவாகுதேவர், சுவாமி நாங்கள் வந்தது சூரனுடன் சமர்புரிவதற்காக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் திரையிடச் சொல்கிறீர்கள் என்று கேட்டாராம். அதற்கு முருகன், "சூரனிடமோ அவன் படையினரிடமோ நட்பு உறவாடவோ அல்லது பார்க்கவோ விரும்பவில்லை. சமர் புரியவந்துள்ளேன். அதனால் உடனடியாக திரையை இடுங்கள்" என்று கூறினாராம்.

இப்பொழுதும் கதிர்காமக்கந்தன் ஆலயத்தில் எந்நேரமும் திரைபோட்டபடியே இருப்பதை நீங்கள் பார்க்கலாம். இக்கோயிலின் பக்கத்தால் சென்றால் செல்லக்கதிர்காமம் போகலாம். அதனிடையே சூரன் கோட்டை இன்னமும் இருக்கின்றது. ஆனால் இப்பொழுது பௌத்த ஆதிக்கமுள்ளவர்கள் இந்த சூரன் கோட்டையின் பெயரைச் சூரவிகாரை என்ற பெயர் சூட்டி உள்ளே புத்தபகவானை வைத்திருக்கிறார்கள்.

முருகையன், வீரவாகு தேவரிடம், "சூரனிடம் சென்று சுவாமி வந்திருப்பதாகவும், நீ அடைத்து வைத்திருக்கும் தேவர்கள், முனிவர்கள் ஆகிய எல்லோரையும் சிறையில் இருந்து விடுவிக்கும்படியும், இல்லாவிடில் போர் நடக்கும்" என்று சொல்லும்படி சொன்னாராம்.

வீரவாகு, சூரனிடம் சென்று ஐயனின் கட்டளையைச் சொன்னாராம், அதற்கு அவன், "அங்கு வந்திருக்கும் சின்னப் பொடியனை என் கண்ணுக்கு நன்றாகத் தெரிகிறது. அவனிடம் போய், போர் புரிவதற்கு அவன் தகுதி அற்றவன். வந்த வழியே திரும்பிச்செல்லும்படி சொல்" என்றானாம்.

ஒரு மிக முக்கிய விடயம். கைலை நாதர் எதற்காக முருகையனை பெற்றெடுத்தாரோ, எது தேவையோ, அவைகள் எல்லாம் அவரின் படைப்புடனே உள்ளன. அவரின் சரீரத்தில், அதாவது பன்னிரண்டு கரங்களிலும் கருவிகள் உள்ளன. மிக முக்கியமான கருவி வேலாயுதம். அந்த வேலாயுதத்துக்கு அடியும் இல்லை; நுனியும் இல்லை. இருபக்கமும் கூர்மையாக உள்ளது. முருகையனைப் பல உருவங்களிலும் பார்க்கின்றோம். முத்துக்குமாரர், பழனி ஆண்டவர், ஆறுமுகர் என்பவை சில. ஆறுமுகம் கொண்ட உருவத்தை நாம் அதிகம் பார்த்து தரிசிக்கின்றோம். ஆறுமுகத்தாரின் கைகளில் தான் பன்னிரண்டு கருவிகளைப் பார்க்க முடியும். முக்கியமான கருவி தான் அந்த அபூர்வவேல். சூரனைச் சங்காரம் செய்த வேல். அவர் நின்ற இடத்தில் இருந்து அதைத் தொட்டார், அது போய் தன் வேலையை முடித்துவிட்டு வந்து அவர் கையிலேயே சேர்ந்தது. அந்த வேலைத் தொடு என்ற விடயம் "கந்தர் அனுபூதியில" அருண கிரிநாதர் பாடியிருக்கிறார். அதனைக் கீழே குறிப்பிடுகிறேன்.

"கார்மா மிசைகாலன் வரில் கலபத்
தேர்மா மிசைவந்து எதிர்ப் படுவாய்
தார்மார் பவலாரி தலாரி எனும்
சூர்மா மடியத் தொரு வேலவனே"

என்று பாடியிருக்கிறார்.

இப்பொழுது சில சமயப் பேச்சாளர்கள் எல்லாவற்றையும் குழப்புகிறார்கள். கந்தபுராண விரிவுரையைத் தைப்பூசத்துடன் கலந்து, தைப்பூசத்தில் தான் முருகன் அம்பாளிடம் வேல் வாங்கியதாகவும் குழப்புகிறார்கள். கச்சியப்ப சிவாசாரியாரின் கந்தபுராணத்தைச் சரியாகப் படித்தால் இது நன்றாக விளங்கும். 1960 - 1965 ஆண்டு கல்கி புஸ்தகத்தில் வாரியார் சுவாமி விரிவாக எழுதியிருக்கிறார். தற்கால எழுத்தாளர்கள் புதிதாக எதையாவது எழுதி வருங்கால மக்களைப் குழப்பாமல் விட்டால் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கு! ஒரு விளக்கம்

- க.செல்வரத்தினம் -

இரவில் வீட்டில் விளக்கு அணைந்துவிட்டால் நாம் அதிர்ச்சி அடைவது இயல்பு. விளக்கெரிந்தால் வீடு மங்களமாக இருக்கும். சூரியன், சந்திரன், அக்கினி என்பவை இருளை அகற்றிநிற்பவை. பகலிலே பொருள்களை விளக்கி நிற்பது ஆதவன். இரவில் சந்திரன் எமக்கொளி தருகிறது. அக்கினியும் தனது ஒளிமூலம் விளக்கி நிற்கிறது. இந்த மூன்றும் இல்லாதபோது இருள் நம்மைச் சூழ்ந்துகொள்கிறது. இருளில் நமது கண்ணுக்கு ஒன்றும் தெரியாது.

ஆணவத்துக்கும் இருள் என்று பெயர். ஆனால் இருள் இருப்பது நமக்குத் தெரியும். ஆணவம் இருப்பது தெரியாது. இதை,

ஒருபொருளும் காட்டாது இருளுருவம் காட்டும்
இருபொருளும் காட்டா திது

எனத் திருவருட்பயன் கூறும். நமது வாழ்வில் நன்மை பெற இருள் அகலவேண்டும்; ஒளி பரவ-வேண்டும். திருநாவுக்கரசரும் தமது நமசிவாயத் தேவாரப்பதிகத்திலே,

'இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது' என்று பாடியுள்ளார்.

விளக்கேற்றுதலால் இருள் விலகுகிறது; ஒளி பரவுகிறது. விளக்கில் தீபம் ஏற்றப் படுவதால் எங்கள் உள்ளத்திலும் வீட்டிலும் ஒளிபரவுகிறது. ஒளி தன்னைச் சுற்றியுள்ள பொருள்களைக் காட்டுகிறது ஒளி இறைவனைக் குறிக்கிறது. மனதில் ஒளி தெளிவைக் காட்டுகிறது. வைகாசி விசாகம், குரு பூசைத் தினங்கள் மங்கள வைபவங்களாகும்.

உள்ளத்தில் ஞான விளக்கேற்றுவதை பற்றித் திருமூலர் கூறுகிறார்-

விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்காவர் தாமே - திருமந்திரம் - *1818*

சுவாமிக்குத் தீபம் ஏற்றி வழிபட்டபின் அதை அணைப்பது எப்படி?
கையால் வீசி அணைப்பது தவறு. வாயால் ஊதி அணைப்பது அதைவிடத் தவறு. வீடுகளில், ஆலயங்களில் தீபாராதனை காட்டியபின் கையால் அணைப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள் அண்மையில் சைவ முன்னேற்றச் சங்கம் நடத்திவரும் பெரியபுராணத் தொடர் சொற்பொழிவில் பேசும்போது தீபாராதனை பற்றி அழகாக உரையாற்றித் தீபத்தைப் பூவால் அணைப்பதே பொருத்தமென விளக்கினார்.

அன்றொருநாள் சிலந்தியொன்று அருட்கூத்தனின் திருமேனியில் விழுந்தது. அவசரமாக அச்சிலந்தியை விலக்க எண்ணி, வாயால் ஊதினார் பெண் அடியார். உமிழ்நீர் திருமேனியில் சிந்தியதைக் கண்டு அபசாரமென கோபித்து அக்கணமே அவரைத் துறந்தார் அவரின் கண-வரான திருநீலநக்க நாயனார். பின்னர் இறைவன் திருவருளால் மனம்மாறித் துணைவியாரை ஏற்றுக் கொண்ட நிகழ்வு நமக்குப் புகட்டும் ஒரு பாடமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோக சுவாமிகள்

## (1872 - 1964)

சிவயோக சுவாமிகள் அவர்களின் 57ஆவது குருபூசைத் தினம் 2021ஆம் வருடம் மார்ச் மாதம் 25ஆம் நாள் வியாழக்கிழமையன்று வந்தது. அன்றைய தினத்தில் சுவாமிகளின் திருவுருவச் சிலை ஒன்று யாழ்ப்பாணம், நல்லூரில் அமைந்துள்ள "நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்" ஆலயத்தில் பிரதிட்டை செய்யப்பட்டது. இந்த வைபவத்தைக் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் நிகழ்த்தி வைத்தார்கள். திருவுருவச் சிலையை உருவாக்குவதற்கு, அண்மையில் இலண்டனில் அமரரான சுவாமியின் நெடுநாட் தொண்டர் முனைவர் சின்னத்தம்பி நாகராஜா அவர்கள் பொருளுதவி புரிந்தார்கள். பிரதிட்டை செய்வதற்கான ஏற்பாடுகள் சைவ முன்னேற்றச் சங்கம் (ஐ.இ) அநுசரணையில் செய்யப்பட்டன. திரு, திருமதி சிவனருட்செல்வர் தம்பதியர் சைவ முன்னேற்றச் சங்கத்தின் பிரதிநிதிகளாக இவ்விழாவிற் கலந்து சிறப்பித்தார்கள்.

பிரதிட்டை விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக பராமாசாரிய சுவாமிகள் உரையாற்றினார்கள். அப்போது திடீரென ஒரு பசு மண்டபத்துள்ளே நுழைந்தது. அங்கு இருந்த பெரியோர்கள் இதை ஒரு நல்ல சகுனமாகக் கருதி, அந்தப் பசுவுக்குப் பழம் கொடுத்து தீபாராதனை செய்து வழிபட்டார்கள். அபிஷேகத் தீர்த்தமும் கொடுத்தார்கள். கோயில்களிலே கும்பாபிஷேகம் செய்யும்போது பசுமாடு கொண்டு வந்து பூசிப்பது மரபு; கிரியை முறை. எனவே, யாரும் அழைக்காமல், அழைக்க நினைக்காமல் இருந்தபோது பசு வந்தமை ஓர் ஆன்மிக அதிசயமாகவே கருதப்படுகிறது.

விழாவில் பங்குபெற்ற அமெரிக்க "ஹவாய்" ஆதீன ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் அவர்களும் இந்தப் பசு வந்தமை பற்றிக் குறிப்பிட்டார். "சிவயோக சுவாமிகள் அவர்கள் பசுக்கள் மீது அன்பு காட்டினார். அவைக்கு உணவு கொடுத்தார். ஒரு தெய்வீக நிகழ்வு நடைபெறும்போது பசு வந்த செயல் குருநாதரின் பெருமைக்கு ஒரு சான்று" என்றார் அவர்.

திரு பிரதீபன் என்ற அன்பர், வெளிநாட்டு அன்பர்கள் இந்த வைபவத்தைக் கண்டு களிக்கக்கூடியதாக "Zoom" வழியில் ஒளிபரப்பினார். அவருக்குச் சைவ முன்னேற்றச் சங்கம் நன்றி நவில்கிறது.

சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் வடபாலுள்ள மாவிட்டபுரம் என்ற ஊரில், அம்பலவாணர் - சின்னாச்சியம்மை தம்பதியருக்கு மகனாக அவதரித்தார். இவரின் பிறப்புப் பெயர் சதாசிவம். சிறுவயதிலேயே தாயார் இறந்துவிட, தாயாரின் சகோதரியார் இவரை வளர்த்தார். 1905ஆம் வருடம் நல்லூரில் செல்லப்பா சுவாமிகளைக் கண்டதிலிருந்து இவரின் வாழ்க்கை மாறியது. அவர்பற்றிய விவரங்கள் செவிவழிச் செய்தியாகவும் புத்தக வடிவிலும் வந்துள்ளன.

சுவாமிகளாற் பயனடைந்தோர் பலர். ஆன்மிக வழியிற் செல்லப் பலருக்குச் சுவாமிகள் வழிகாட்டியாக இருந்தார். நற்சிந்தனைப் பாடல்களைப் பாடினார்.

**பிரதிட்டை விழாவில் எடுத்த படங்கள் எதிர்ப்பக்கத்தில்.......**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை ஆதீனத்தில்
# சிவயோகசுவாமிகள் திருவுருவம் பிரதிட்டை

## 25.03.2021









**உபயம்: முனைவர் சி நாகராஜா**

**ஒழுங்கமைப்பு: சைவ முன்னேற்றச் சங்கம் (ஐ.இ)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Enlightenment Circle

VIDYA DHANAM...

Saiva Munnetta Sangam

# Out Reach Projects - Sri Lanka – Jan'21

**Educational Materials Distributed to the underprivileged children in Vanni**

Yoga team has been honored to provide educational materials to the following schools in the Vanni who requested this help to the children (over 700) in need.

| | Request |
|---|---|
| M-Kortaikattiyakulam MV | 160 |
| M-Iyankankulam M.V | 195 |
| K-Anaivilunthan GTMS | 68 |
| K-Vannerikulam M.V | 190 |
| Elephant Pass GSTM | 98 |





**Special thanks go to the following for their kind contribution:**

| | | |
|---|---|---|
| Miss | B | Balakrishnan |
| Mr | V | Bavaharan family |
| Mr | S | Brahatheesan family |
| Mr | S | Kathiripillai family |
| Mrs | B | Linganandan family |
| Mr | S | Mohan family |
| Miss | A | Rabindramohan |
| Mrs | S | Uruthiran family |
| Mrs | I | Varatharajan family |
| Mr | S | Vignarajah family |







Sincere thanks to the yoga team for their support and our thanks to KM Foundation for their invaluable help on the ground in successfully carrying out this operation......

If anyone interested in contributing to this cause, please contact us...




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANNA DHANAM

Enlightenment Circle

Saiva Munnetta Sanga

## Out Reach Projects – India – Feb'21

**Anna Dhanam provided (meal offerings) for Destitute People in Madurai town, South India during February'21**

Approximately 60 vegetarian meals were cooked and served daily to destitute people (mentally ill, elderly, homeless etc.) living in Madurai town (South India) by "Kanthimathi Ammal". She has been doing this for years despite, no income of her own.

Meals were cooked early in the morning every day and parcels are distributed from a special place in Madurai maintaining social distancing due to COVID-19 and served to the destitute people.





She was supplied with provisions to continue he services without any challenges. Kanthimathi Ammal follows Ramalinga Swamigal's (Vallalar) noble teachings of feeding the poor where possible.

**Nutritious vegetarian meals have been served to the hungry in Sri Lanka, India, Malaysia, Nepal etc. with your support.**



**Sincere thanks go to Ms. M Kanagalakshmi from Chennai who is successfully coordinating all our activities very methodically in India.**

Enlightenment Circle with the help of well-wishers provide financial support for this exceptional service by sponsoring the cost of 20 meals per day. I.e. this is approximately helping 500 hungry people per month.

**Special thanks to our donors:**
**Mrs I Malagoda family**
**Dr (Mrs) A Srinivasan**
**and all the well-wishers who wish to remain anonymous.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANNA DHANAM

Enlightenment Circle

Saiva Munnetta Sanga

## Out Reach Projects – India – Dec'20

**Anna Dhanam provided (meal offerings) for Destitute People in Madurai town, South India during December'20**

Approximately 60 vegetarian meals were cooked and served daily to destitute people (mentally ill, elderly, homeless etc.) living in Madurai town (South India) by "Kanthimathi Ammal". She has been doing this for years despite, no income of her own.

Meals were cooked early in the morning every day and parcels are distributed from a special place in Madurai maintaining social distancing due to COVID-19 and served to the destitute people.





Kanthimathi Ammal follows Ramalinga Swamigal's (Vallalar) noble teachings of feeding the poor where possible.



**Sincere thanks go to Ms. M Kanagalakshmi from Chennai who is successfully coordinating all our activities very methodically in India.**

**Nutritious vegetarian meals have been served to the hungry in Sri Lanka, India, Malaysia, Nepal etc. with your support.**



Provisions for Anna Dhanam supplied

Enlightenment Circle with the help of well-wishers provide financial support for this exceptional service by sponsoring the cost of 20 meals per day. I.e. this is approximately helping 500 hungry people per month.

**Special thanks to our donors:**
**Mrs I Malagoda family**
**Mrs S Inlasingh**
**Dr (Mrs) A Srinivasan**
**and all the well-wishers who wish to remain anonymous.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

## விசேட நாள்கள்

**ஏப்பிரல் (14-04-2021) தொடக்கம் ஜூன் (22-06-2021) வரை**

| | | |
|---|---|---|
| 14.04.2021 | புதன் | பிலவ வருடப்பிறப்பு |
| 26.04.2021 | திங்கள் | சித்திரைப் பௌர்ணமி |
| 03.05.2021 | திங்கள் | நடேசர் அபிஷேகம் |
| 05.05.2021 | புதன் | திருநாவுக்கரசர் குருபூசை |
| 17.05.2021 | திங்கள் | சேக்கிழார் குருபூசை |
| 25.05.2021 | செவ்வாய் | வைகாசி விசாகம் |
| 28.05.2021 | வெள்ளி | திருஞானசம்பந்தர் குருபூசை |
| 22.06.2021 | செவ்வாய் | பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி நினைவு |

**பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.**

**கோயில் திறந்திருக்கும் நேரம்:**

காலை: 8.30 மணிமுதல் 13.00 மணிவரை
மாலை: 5.00 மணிமுதல் 9.00 மணிவரை

அன்பர்கள் அனைவரும் வந்து, ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத், திருவருள் பெற்று உய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

## Saiva Munnetta Sangam (UK)

"Community Service Through Saiva (Hindu) Concern"
2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732 Fax: 01268 561805
www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com

Registered Charity No: 292085


## MEMBERSHIP FORM

| | | | |
|---|---|---|---|
| Title | | Home Phone | |
| First Name | | Mobile No | |
| Surname | | Email ID | |
| Address | | Membership | ☐ Annual £15.00 ☐ Life £150 |
| Town<br>Post code | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payme for £ .......................... Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazin

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

giftaid it

*Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means tha £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.*

*By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASC's I donate to, will reclaim on m gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understan the charity will reclaim 25p of tax on every £1 that I have given.*

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து சைவ சமய வளர்ச்சியில் பொலன்னறுவைக் காலத்து சைவம்

திரு பாலன் சுதாகரன் (சாரதா அறப்பள்ளி, சமன்பட்டி)



சனாதனபுரமங்கலம், புலத்திய நகர் என்றெல்லாம் வரலாற்று இலக்கியங்களிலே கல்வெட்டுக்களிலே பெயர் பொறிக்கப்பட்ட பொலன்னறுவை இராய்ச்சியமானது ஏனைய கால வரையறைகளோடு ஒப்பிடும் போது பாரிய வேறுபாடுடையது. இதன் முக்கியத்துவம், இக்காலச் சைவத்தினுடைய வளர்ச்சி, பரந்துபட்ட தன்மை, எழுச்சி இவை பற்றிச் சிறிது நோக்குவோம்.

ஈழத்து வரலாற்றிலே பொலன்னறுவைக் காலத்திற்கு தனித்துவமான இடமுண்டு. அநுராதபுரத்தை ஆட்சி செய்த மன்னர்களது ஆட்சி வலிகுன்றி இருந்த வேளையில் கி.பி.1017 ஆம் ஆண்டு தென்னிந்தியா விலிருந்து, படை எடுத்து வந்த முதலாவது இராஜராஜசோழனும், அவனது மகன் இராஜேந்திர சோழனும் இலங்கை முழு வதையும் கைப்பற்றி பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு 1113 வரை ஆட்சி செய்த காலமே பொலன்னறுவைக் காலம் எனப்படும்.

இக்காலத்தைப் பொறுத்தவரையில், தமிழ கத்துக்கும், ஈழத்துக்கும் இடையேயான தொடர்பு, வணிகத்தொடர்பு, போரியல் பின்னணி போன்ற பல்வேறுபட்ட விடயங்களால் மட்டுமல்லாது அரசியல் பின்புலத்தாலும் எல்லோரது ஆதரவோடும் இந்து மதம் நிரந்தரமாக இடம்பெறவும் பௌத்தத்தோடு இணைந்து வாழவும் வகை செய்யப்பட்து.

ஈழத்தின் வடபகுதியை இராஜராஜசோழன் கைப்பற்ற, இவன் மகன் முதலாவது இராஜேந்திர சோழன் கி.பி.1017 இலங்கை முழுவதையும் கைப்பற்றி 53 ஆண்டுகள் ஆட்சி செய்த காலப் பகுதியில் 9 ஆவது மாகாணம் மும்முடிச் சோழ மண்டலம் எனக் குறிப்பிடப்பட்டது.

ஈழத்தை நிர்வகிக்கவெனச் சோழநாட்டிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டவன் இலங்கேஸ்வரன் என ஈழக் கல்வெட்டுக்கள் கூறும். பொலன்னறுவை இராச்சியத்துக்குச் சோழர்கள் சூட்டிய பெயர் ஜனனாத மங்கலம் என்பதாகும். இது இராஜராஜனுக்கு வழங்கப்பட்ட ஜனனாதம் என்ற பட்டப்பெயரை நினைவுபடுத்தும் என்பது அறிஞர் கருத்து. இக்காலத்தே இராஜராஜேஸ்வரம், திருவிராமேஸ்வரம் ஆகிய கோயில்கள் சிறப்புடையனவாய் இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்காவற்றுறையில் அமைந்த கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட சோழர்கள் கட்டுவித்த கோயிலில் கல்லினாலான கதவு நிலையில் எழுதப்பட்ட கல்வெட்டொன்றில், மாதோட்டத்தி லேயே சோழர் தம்பதியாகிய ஜெயம் கொண்ட மூவேளாளர் இங்குள்ள கோயிலுக்கு தானம் வழங்கினார் என அறியக்கூடியதாக உள்ளது. தாலிக்குமரனால் அமைக்கப்பட்டட இராஜ ராஜேஸ்வரக் கோயில் கல்வெட்டிலே ராஜராஜேஸ்வரத்து மகாதேவன் கோயிலாக குறிப்பிடப்பட்டதனைக் காணலாம். மேலும் இக்கோயிலுக்காக அரச நிதி வழங்கப்பட்டது என்றும், அன்றாடம் அன்னதானம் என அனைத்து சலுகைகளும் செய்யப்பட்டு, அரச கோயிலாக இராஜராஜேஸ்வரம் விளங்கியுள்ளது.

மகாதேவன் கோயில் எனக் குறிப்பிடப்பட்ட திருவீர இராமேஸ்வரத்தில் கிடைக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று இக்கோயிலின் சந்தி விளக்கு, அதாவது மாலை வேளை விளக்கு எடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகள் பற்றிக் கூறி நிற்கின்றது.

இவையெல்லாம் சோழ அரசர்களின் சமயப்பற்றினையும், அதனைக் கோயில் மூலம் அவர்கள் வெளிப்படுத்தியமையும் காட்டு கின்றது. இரண்டாம் கஜபாகு மன்னன் கல்வெட்டில் முதலாவது ராஜராஜனால் அக்காலகட்ட பரப்பில் இந்துக்கோயில்களும் அவற்றை அண்டிப் பிராமணக் குடி யிருப்புக்களும் அமைக்கப்பட்டன என்று குறிப்புகள் காணப்படுகின்றன. பிராமணர் களைப் பொறுத்த வரையில் சோழர் காலத்தில் அவர்களுக்குரிய மரியாதை வழங்கப்பட்ட தொரு காலமாகும் எனக் கூறின் மிகையல்ல. இராஜராஜ சதுர்வேதி மங்கலம் எனக் கூறப்படுவது பிராமணர் குடியேற்றம் ஏற்படுத்தியதை வரலாறுகள் கூறுகின்ற சதுர்வேதி மங்கலம் ஆகும். மேலும் ஜயங்கொண்டேஸ்வரம் என்ற கோயில் அமைத்து அதனை சேவிக்கவென ஜயங்கொண்ட சதுர்வேதிமங்கலம் பிராமண குடியேற்றத்தையும் ஏற்படுத்தி சோழர்கால சமய நடவடிக்கைகள் சிறப்பு பெற்ற இடமாக பொலன்னறுவையை சிறப்பித்தனர்.

இச்சான்றுகளின் உண்மை மிகிந்தலையிலிருந்து 3 மைலுக்கு அப்பாலமைந்த மகா கிருஷ்ண கமவிலேயே கிடைக்கப்பெற்றதாகும். பொலன் னறுவையில் சோழர்கள் நிறுவிய கோயில்களின் பெரும்பாலானவை இன்று இக் கோயிலிடத்தே காணப்படும் கல்வெட்டுக்கள் அவ்வாலய நிருவாகங்கள் பற்றியே பேசுகின்றன.

பொலன்னறுவையில் மாத்திரம் சோழர்கால கட்டடக் கலைப்பாணியில் அமைந்த கோயில்களில் 10 சிவன்கோயில்கள், 5 விஷ்ணு கோயில்கள், ஒரு காளி கோயில் உள்ளடங்கி இருப்பது, அக்கால சமய வளர்ச்சியின் உன்னத நிலையினைக் காட்டுகின்றது. இக்காலச் சிவன்கோயில்களில் ஒன்று காலத்தால் முந்தியதாயும் ராஜராஜனின் பட்டத்து அரசியாகிய வானவன் மாதேவியின் பெயரில் அமைக்கப்பட்டது. இக்கோயிலில் ஒன்றுதான் முழுமையாக கருங்கல்லால் கட்டப்பட்டது. பொலன்னறுவையில் காணப் படும் கட்டடங்களின் பழைமை ஈழத்தவரின் கட்டடக்கலைப் பாணிக்குத் தக்கதொரு துணைச்சான்றாக இக்கோயில் காணப் படுகின்றது. இது இன்றுவரையும் சைவ சமயத்தவர்களுக்கு நிலைக்களனாக ஈழத்து இந்துக்களுக்கும் பொலன்னறுவை வாழ் தமிழர்களுக்கும் எச்சங்களின் மிச்சங்களாக விளங்குகின்ற ஒரே ஒரு ஆலயமாகும். (இதன் வரலாற்றினை தனி ஒரு கட்டுரையில் நோக்குவோம்)

இவற்றை விட, இக்கோயிலை அண்டி மூன்று சிறு கோயில்களும் உள்ளன. விஷ்ணு, கணேசர், முருகன் ஆலயம் காணப்படுவதும், பல தெய்வங்களுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தினை பறை சாற்றுவதாக உள்ளது. இவற்றினை விட இக்காலத்திற்கு உரியனவையாக பல்வேறு வரலாற்று உண்மைகளும் சான்றுகளும் கொழும்பு நூதனசாலையினூடாக வெளிக்கொணரப் பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆய்வுகளிலே வெண்கலச்சிற்பங்களும் சோழர்காலத்தவரின் கலை வளர்ச்சி ஈழத்தில் ஏற்படுத்திய தாக்கத்தினை காட்டுகின்றன. தமிழகத்தில் சோழரது சிற்பங்கள் எவ்வாறெல்லாம் வரலாற்று உரைகல்லாய் அமைந்தனவோ, அத்தகைய நிலையை ஈழத்துச் சிலைகளும் பறை சாற்றின. சிவன், பார்வதி, விநாயகர், விஷ்ணு, கந்தன், பிரம்மா, சூரியன், நந்தி, நாயன்மார், காரைக்காலம்மை, சிவலிங்கம் முதலானவை குறிப்பிடத்தக்க வெண்கலச்சிலைகள் ஆகும்.

இவற்றுள் நடராஜர் மூர்த்தம், சோமாஸ்கந்த மூர்த்தம், பைரவர் மூர்த்தம் முதலான மூர்த்தங்களும் சிவன், பார்வதி மூர்த்தங்களும் அடங்கும். கண்டெடுக்கப்பட்ட சிற்பங்களுள் காரைக்காலம்மையார் மிகமிக உணர்வையும் உயிரையும் கொடுப்பதாய் உள்ளது. இக்கால வெண்கலச் சிற்பங்கள் பல அநுராதபுர அரும் பொருட்காட்சியகத்தில் இன்றும் காணக் கூடியதாய் உள்ளன.

வடமத்திய மாகாணத்தில் உள்ள பத வியாக்குன்று சோழர் காலத்தில் முக்கியம் பெற்றுக்காணப்பட்ட ஓர் இடமாகும். இவ்விடத்திலேயே 6 சிவன் கோயில்களும், ஒரு காளி கோயிலும் காணப்பட்டன. முதலாவது சிவாலயம் இராஜராஜனுடைய பெயரால் ரவிகுலமாணிக்கேஸ்வரம் என வழங்கப்பட்டது. மணிகள், பொற்காசுகள், மிருகம் ஆகியன இக்கோயிலுக்கு தானம் வழங்கப்பட்டதாக ராஜராஜன் கல்வெட்டு சான்று பகர்கின்றது.

சோழர்களது தலைநகரான பொலன்னறுவை விளங்கியிருந்தாலும் இக்காலத்தே திரு கோணமலை மாவட்டமும் இந்து மத வளர்ச்சியில் அதே நிலையினை பெற்றிருந்தமை கண்கூடு. இக்காலத்திலேயே கோணேஸ்வரத்தை மச்சேஸ்வரம் எனக் குறிப்பிட்டமைக்கு தட்சணகைலாய புராணம், மாங்கேணி, நிலாவெளி ஆகிய இடங்களில் கிடைத்த கல்வெட்டுக்கள் சான்றாகும்.

மேலும் அநுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டொன்று உத்தம சோழேச்சரம் எனும் ஆலயம் பற்றிக் கூறுகின்றது. இதைவிட புற நகரில் உள்ள மணித்தலை எனும் கிராமத்தில் சோழர் பாணியிலமைந்த சிவாலய எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு இராஜராஜ சதுர்வேதி மங்கலம் பற்றிக் கூறுகின்றது. சிவன், பார்வதி, நந்தி, ஆகிய சிற்பங்கள் சைவ வைணவ வழிபாட்டின் வளர்ச்சிப் போக்கினையும் சுட்டி நிற்கின்றது.

ஆகவே சோழர் ஆட்சியின் நிருவாகம் எங்கெல்லாம் பரந்து விரிந்ததோ அங்கெல்லாம் ஆலயங்கள் வாயிலாக இந்து மதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தமை உண்மை. சோழர் ஆட்சியிலிருந்து ஈழத்தை 1ஆம் விஜயபாகு மீட்டெடுத்து பௌத்த மதத்தினை வளர்க்க வேண்டிய தேவை அவனுக்கு இருந்தது. இருப்பினும் இந்துமத வழிபாடுகளை அவனும் புறக்கணிக்கவே இல்லை.

மேலும், சோழர் கால சமயத்தை மட்டுமன்றி சமய ஸ்தாபனங்களையும் அவன் புறக்கணிக்கவில்லை. சோழர்காலச் சமய ஸ்தாபனங்களை அவன் தொடர்ந்து இயக்க அனுமதித்ததோடு அவன் இவற்றுக்குரிய முழு ஆதரவினைச் செய்தான் என பரணவிதான எனும் வரலாற்றுப் பேராசிரியர் கூறும் கருத்து இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது.

இக்காலத்தில் சிறப்பு பெற்றிருந்த இராஜேஸ்வரம், சதுர்வேதிமங்கலம் ஆகியனவும் 1ஆம் விஜயபாகு மன்னன் காலத்தில் சிறப்புப்பெற்றிருந்தன. அவற்றின் பெயர்களை விஜய ராஜேஸ்வரம், விஜயராஜேஸ்வர சதுர்வேதிமங்கலம் எனும் தன் பெயரில் அடைமொழியாக வழங்கி அவற்றிற்கான ஆதரவினை வழங்கியமையும் வித்தியாசமான தொரு விடயம். 1ஆம் விஜயபாகுவிற்கு பின் ஆட்சியில் ஏறியவர்கள் விக்கிரமபாகு, 2ஆம் கஜபாகு ஆகியோர். இவர்கள் இயல்பிலே இந்துக்களாகையினால் இந்துமதமும் ஒரு வகையில் வளர்ச்சி கண்டது.

**தொடர்ச்சி 34ஆம் பக்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்குறள் கதைகள்
# Thirukural Stories

திருமதி சாவித்திரி ஆனந்தன்

## வெகுளாமை
## Banishing Anger

அதிகாரம் : 31 குறள் : 305

**தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம்.**

பொருள்:
ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொள்வதானால், அவன் சினம் வராமல் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். காக்காது விட்டால் சினம் அவனை அழித்து விடும்.

Woeful anger devours your mind and body, banish it fast from mind in Self–defence.

ஒரு சமயம் கிருஷ்ணர், பலராமன், அர்ச்சுனன் ஆகிய மூவரும் காட்டு வழிப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்கள். நேரம் நள்ளிரவு கடந்து விட்டதால், ஒரு இடத்தில் தங்கி உறங்கிவிட்டு விடிந்த பின் பயணம் தொடர முடிவு செய்தார்கள். கொடிய மிருகங்கள் உள்ள காடு என்பதால், மூவரும் ஒரே நேரம் உறங்காமல், ஒரு ஜாமத்திற்கு ஒருவர் காவலிருக்க மற்ற இருவரும் உறங்குவது என்று முடிவெடுக்கப்பட்டது.

முதலில் அர்ச்சுனன் காவல் இருந்தான். மற்ற இருவரும் தூங்கினர். திடீரென்று ஒரு புகை மண்டலம் தோன்றி, அதிலிருந்து ஒரு பயங்கர உருவம் வெளிவந்தது. அகன்ற நாசி, கோரப் பற்கள், பெரிய கண்கள் கொண்ட அந்த உருவம் தூங்கிக்கொண்டிருந்தவர்கள் பக்கம் போனது கண்ட அர்ச்சுனன், கோபம் கொண்டு அதைத் தடுத்தான். இருவரையும் தான் கொல்லப் போவதாகவும், அதற்கு அர்ச்சுனன் உதவ வேண்டும் எனவும் அந்த உருவம் கேட்டது. கோபம் உச்சமடைய அர்ச்சுனன் அதைப் பலமாகத் தாக்கினான். அர்ச்சுனனுடைய கோபம் அதிகமாக அதிகமாக, அந்த உருவத்தின் பலமும் அந்த வடிவமும் மேலும் பெரிதாகியது. மேலும் கோப மடைந்து அர்ச்சுனன் சண்டை போட அது மேலும் பூதாகாரமாகி அவனைத் தாக்கிவிட்டு மறைந்தது.

இரண்டாம் ஜாமக் காவல் பலராமனுடையது. அவரை எழுப்பிவிட்டு, அர்ச்சுனன் உறங்க ஆரம்பித்தான். மீண்டும் தோன்றிய அந்த உருவத்தைக் கண்டு பலராமரும் அதிக கோபப்பட்டு அதைத் தாக்க, முன்போலவே அது பலராமரையும் தாக்கிவிட்டு மறைந்தது.

மூன்றாம் ஜாமம் கிருஷ்ணருடைய முறை. மற்றைய இருவரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். இப்போதும் அந்தப் பயங்கர உருவம் கிருஷ்ணர் முன் தோன்றியது. கிருஷ்ண பரமாத்மா பலமாகச் சிரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஏன் சிரிக்கிறாய்?” என்று அந்த உருவம் சினத்தோடு கேட்டது.
“உனது தூக்கிய பற்களையும், பெரிய முட்டைக்கண்களையும் கண்டு தான் சிரித்தேன்” என்று கிருஷ்ணர் சிரிப்பை அடக்க முடியாமல் கூறினார். கோபம் உச்சமடைந்த அந்த உருவம் மேலும் சண்டை போடப்போட, கிருஷ்ணரோ புன்னகை மாறாமலேயே அதனுடன் சண்டை போட்டார். கிருஷ்ணர் சிரிக்கச் சிரிக்க, அந்த உருவத்தின் பலமும் வடிவமும் குறைந்து கொண்டே போய், கடைசியில் ஒரு புழுவாக மாறி தரையில் நெளிந்தது. கிருஷ்ணர் அதை எடுத்து ஒரு துணியில் முடிந்து வைத்தார்.

காலையில் மற்ற இருவரும், அந்த உருவம் பற்றியும், அது தாக்க வந்தது பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்கள். அவ்விடம் வந்த கிருஷ்ணர் துணியில் இருந்த புழுவைக் காட்டி, “அந்த உருவம் இதுதான்” என்றார்.

“நீங்கள் இருவரும் கடுமையாகக் கோபப்பட்டுச் சண்டை போட்டீர்கள். உங்கள் கோபம் அதிகரிக்க அதிகரிக்க அதன் பலமும் வடிவமும் அதிகரித்து. நான் கோபப்படாமல் சிரித்தபடியே சண்டையிட்டேன். அது தன் பலமும் வடிவமும் குறைந்து புழுவாக மாறிவிட்டது. வம்புச் சண்டைக்கு வருபவனை விட்டு, புன்னகையோடு வெளியேறி விலகிச் சென்றுவிட்டால், அவன் புழுவுக்குச் சமமாகிவிடுவான்” என்று கூறிய கிருஷ்ணர், “கோபத்தைக் குறைப்பவனே ஞானி” என்ற உண்மையை எடுத்துக் காட்டினார்.

Once, Krishna, Balaraama and Arjuna went on a journey through a forest. Since, it was past midnight, they decided to stay somewhere, sleep and continue the journey next morning. Being aware of the wild animals, they made a plan. They took turns to safeguard each other. They made an agreement that one person stayed awake while the other two slept.

First turn was Arjuna’s. He remained awake, watching the surrounding while Krishna and Balaraama slept. Suddenly there was a dense cluster of smoke from which came out a huge figure with wide nose, pointed big teeth and large eyes. When it moved towards the sleeping persons, Arjuna got angry and stopped it.

‘I am going to kill those two. Can you help me?’ the figure asked Arjuna. Arjuna’s anger increased to its peak and he started to attack the figure furiously. Longer his anger intensified and increased, the strength of the figure also increased enormously and its stature also grew more and more. It attacked Arjuna and vanished.

The next was Balarama’s turn. After waking him up, Arjuna went to sleep. Again the huge figure appeared in front of Balarama as before. Like Arjuna, Balarama also got angry, fought with it furiously and finally it attacked Balarama and vanished.

Krishna’s turn was next. The other two were sleeping. Again the figure appeared in front of Krishna. Lord Krishna laughed loudly.

‘Why are you laughing?’ the figure asked Krishna angrily.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘On seeing your abnormal teeth and ball like eyes, I am laughing. Krishna said that he was unable to stop his laughter. This intensified the anger of that figure and it began to attack Krishna brutally. Still Krishna continued to fight with it with the same smiling face.

When Krishna kept laughing and laughing, the figure lost its strength gradually and the stature became smaller and smaller, and finally it changed into a small worm crawling on the floor.

Krishna took it and bundled it in a piece of cloth.

On the following morning, Arjuna and Balarama were discussing about the incident that happened that night. Krishna came there and showed them the worm he tied in a cloth and told them, ‘This is the figure which appeared last night. Both of you got angry and fought with it. When your anger increased the strength of the figure also increased rapidly along with it’s stature. I fought it, laughing with no anger and the figure lost its strength and finally became a tiny worm.

'If anybody comes and fights with you, ignore them and make them quit with your smile. Then the enemy will lose his strength and become like a powerless worm.’ Krishna told.

This story tells us that by controlling our anger, we can attain higher state, and become a sage like person.

## தெய்வம் இருப்பது எங்கே?

**பசித்த வயிற்றில் உணவு தெய்வம்: பாலைவனத்தில் தண்ணீர் தெய்வம்**
**கொட்டும் மழையில் கூரை தெய்வம்: கோடை வெயிலில் நிழல் தெய்வம்**
**உடைந்த கல்லில்?**
**ஒன்று தெய்வம், ஒன்று கோயில், ஒன்று வாசல்**
**இறைவன் படைப்பில் எல்லாம் ஒன்றே**
**இடத்தைப் பொறுத்தே எதுவும் மாறும்**

**- கவியரசு கண்ணதாசன்**

***31ஆம் பக்கத்தொடர்ச்சி......***

இக்காலத்தே குருணாகல் மாவட்ட மாகல எனும் இடத்துக் கல்வெட்டு விக்கிரமபாகு இந்துமதத்துக்குக் கொடுத்த முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறுகிறது. படிப்படியாக வளர்ந்து வந்த பொலன்னறுவைக் காலத்து இந்து சமய வளர்ச்சி நிலை பாரியதொரு வரலாற்று மாற்றத்தினை இலங்கையிலே ஏற்படுத்தியது என்பதனை எந்தவொரு வரலாற்று சான்றுகளும் மாற்றிவிட முடியாது. இவை எல்லாவற்றையும் வரலாற்று ரீதியாக அன்றி, சமய வளர்ச்சி ரீதியாக நோக்கின் ஈழத்திலே பொலன்னறுவைக் காலத்தினுடைய சமய வளர்ச்சியும் நன்கு புலப்படும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்துவம் மிக்க பங்குனி உத்தரம்

திரு கமலநாதன் கயிலைவாசன் (இளஞ்சைவப்புலவர்)

தமிழ் மாதங்களில் பன்னிரண்டாவது மாதம் பங்குனி. நட்சத்திரங்களில் பன்னிரண்டாவது நட்சத்திரம் உத்தரம். இவை இரண்டும் இணையும் திருநாளே பங்குனி உத்தரம். பங்குனி உத்தர நட்சத்திரத்தில் சுப நிகழ்ச்சிகளை நடத்துவது நம் வழக்கம். பல தெய்வத் திருமணங்கள் கூட பங்குனி உத்தரத்தில் நடைபெற்றதாக ஞான நூல்கள் கூறுகின்றன. இமவான் தன் மகள் பார்வதியை சிவனுக்குத் திருமணம் செய்யத் தேர்ந்தெடுத்தது, மதுரையில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமணம் நடந்தது, இராமர் சீதையை மணந்தது, இலட்சுமணன், சத்துருக்கன் ஆகியோருக்கும் திருமணம் நடந்தது, திருப்பரங்குன்றத்தில் முருகன்-தெய்வயானை திருமணம் நடந்தது, ஆண்டாள் ரங்கமன்னர் திருமணம் நடந்தது, சிவன்--பார்வதி திருமணம் நடந்தது, அகத்தியர் - லோபமுத்திரை, ரதி - மன்மதன், இந்திரன் - இந்திராணி, நந்தி - சுயசை, சாஸ்தா - பூரணை, புஷ்கலை - சந்திரன் - 27 நட்சத்திர மங்கையர் என அனைத்துத் திருமணங்களும் பங்குனி உத்தர நாளிலேயே நடைபெற்றன.

மேலும் இடும்பன் மூலம் காவடி தூக்கும் பழக்கமும் ஆரம்பித்தது, காஞ்சியில் காமாட்சி அம்மன் ஆற்று மணலைச் சிவலிங்கமாகப் பிடித்து வழிபட்டு சிவனின் அருளைப் பெற்றது, அர்ச்சுனன் பிறந்தது, தர்மசாஸ்தாவான சபரிமலை ஐயப்பன் அவதரித்தது. சிவனின் தவத்தைக் கலைக்க நினைத்த மன்மதனைச் சிவன் நெற்றிக் கண்ணால் எரித்ததும் பின்பு ரதியின் பிரார்த்தனைக்கு மனமிரங்கி மன்மதனை உயிர்ப்பித்த நாளும் இதுதான். மார்க்கண்டேயருக்காகச் சிவன் காலனை தன் காலால் உதைத்த நாள் ஆகிய அனைத்தும் நடந்தது பங்குனி உத்தர நன்னாளில்தான். சமஸ்கிருதத்தில் பங்குனி மாதத்திற்கு பல்குணன் என்ற பெயரும் உண்டு.

பன்னிரண்டு என்ற எண்ணுக்கு சிறப்புச் சேர்க்கும் இந்நாள் பன்னிரு கையும் பன்னிரு செவியும் கொண்ட வேலனின் சிறப்பான நாளாகக் கருதப்பட்டு, முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆலயங்கள் தோறும் சிறப்பான விழாவாகக் கொண்டாடப்படுகிறது. அதிலும் குறிப்பாக பழனியம்பதியில் பங்குனி உத்தரத்தன்று கொடுமுடிக்குச் சென்று அங்கு பாயும் காவிரி நதியில் தீர்த்தம் எடுத்து வந்து முருகப்பெருமானுக்கு விசேட அபிசேகம் செய்யப்படுகின்றது. காவிரியைப் பெருமைப்படுத்தும் நாள் இந்த நாள்.

பங்குனி உத்தர நாளில் பாரத தேசத்திலுள்ள புனித தீர்த்தங்கள் எல்லாம் திருப்பதியிலுள்ள எட்டுப் புனித தீர்த்தங்களில் ஒன்றான தும்புரு தீர்த்தத்தில் இணைவதாக ஸ்ரீமத்பாகவதம் சொல்கிறது. இந்த நாளில் வெங்கடா சலபதியைச் சேவிப்பதும் புனித நீராடுவதும் சிறப்பானவை. மேலும் வைணவ தென்கலைப் பிரிவின் மகா ஆசாரியரான ஸ்ரீராமானுசர் திருமாலை வணங்கி சரணாகதி கத்யம், வைகுண்ட கத்யம், ஸ்ரீரங்க கத்யம் என்ற மூன்று வசனக் கவிதைளைப் பாடியதால் “உடையவர்” என்ற பதவியைத் திருமாலிடம் இருந்து பெற்றார் இதனைப் பெற்ற நாள் பங்குனி உத்தரம். ஸ்ரீரங்கம் ஆலயத்தின் “சேர்த்தி” வைபவம் நடைபெறுவதும் இந்த நாளில்தான். அரங்கநாதப்பெருமான் - அரங்கநாயகி தாயார் ஊடல் கொண்டு சண்டையிட்டுக் கொள்வதும் பின்னர் இணைவதும் இந்த நாளின் விசேடம். இந்த வைபவத்தைக் காணும் அடியவர்கள் களத்திர தோஷத்திலிருந்து விடுபட்டுத் திருமண வரம் பெறுவார்கள் என்பது ஐதீகம். ஸ்ரீரங்கத்தைப் போலவே இந்த நாளில் காஞ்சி வரதராசப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமாள் ஆலயத்தில் பெருந்தேவித்தாயார் சந்நிதியில் ஸ்ரீதேவி, பூதேவி, ஆண்டாள், மலையாள நாச்சியார், பெருந்தேவித்தாயார் சமேதராக ஸ்ரீவரதராசப் பொருமாள் காட்சி தருவார். இந்த வைபவம் பங்குனி உத்தர தினத்தன்று மட்டும்தான் நடைபெறும்.

திருமகளும் ஐயப்பனும் அவதரித்த பங்குனி உத்தரத் திருநாள் கல்யாண வரமளிக்கும். இந்த நாளில்தான் திருமகள் விரதமிருந்து திருமாலின் திருமார்பில் இடம் பிடித்தார். அதைப்போலவே கலைமகளும் பிரம்மாவின் நாவில் இந்த நாளில்தான் அமர்ந்தார். பார்கவ மகரிஷியின் மகளாக மகாலட்சுமி "பார்கவி" என்ற பெயரில் பூமியில் தோன்றிய நாளும் இந்நாளே. எனவே இந்த நாள் இலட்சுமிகடாட்ச நாளாக விளங்குகிறது. உத்தர நட்சத்திரத்தில் கூடியிருக்கும் சந்திரபகவான் இந்த நாளில் கலையுடன் கன்னி ராசியிலிருந்து களங்கமின்றிக் காட்சி தருவான். அப்போது சந்திரனை வணங்கினால் குடும்ப வாழ்வு சிறப்படையும் என சாத்திரங்கள் கூறுகின்றன. பங்குனி உத்தர நாளில் "கல்யாண சுந்தர விரதம்" இருந்து வழிபட்டால் திருமணம் தடைப்பட்டவர்களுக்கு நல்ல இடத்தில் வரன் அமைவதுடன் இல்லற வாழ்க்கையும் மகிழ்ச்சியாக அமையும். பங்குனி உத்தர தினத்தன்று ஆலயங்களில் வழிபாடு செய்து புதுத்தாலியைப் பெருக்கிக் கட்டிக்கொள்வது சுமங்கலிகளின் வழக்கம். சிவபெருமான் அம்பாளைக் கரம்பிடித்த நன்னாளில் பசுவாகிய தங்கள் ஆன்மா பதியாகிய சிவனை அடைய வேண்டும் என்பதற்காக சிவனடியார்கள் 'கல்யாண சுந்தர விரதம்' அநுட்டிப்பார்கள். இந்நாளில் விரதமிருந்து சிவபெருமானை வழிபட்டால் மோட்சம் கிடைக்கும் என்பது ஐதீகம். 48ஆண்டுகள் தொடர்ந்து பங்குனி உத்தரத் திருநாளில் விரதமிருந்து வழிபட்டால் அடுத்த பிறவியில் தெய்வநிலையை அடைவார்கள் என்பதும் ஐதீகம்.

பங்குனி மாதத்தில் பூமி மீன இராசியில் நிற்க சந்திரன் உத்தர நட்சத்திரத்துடன் கூடி கன்னி இராசியில் பூரண கலை பெற்ற ஏழாம் பார்வையாக பூமியைப் பாரப்பதால் இந்நாள் சிறப்புப் பெறுகிறது.

பங்குனி உத்தரத்தன்று செய்யக்கூடிய சுப நிகழ்ச்சிகளில் பல. அவற்றுள் பூ முடித்தல், தாலிக்கு பொன்னுருக்குதல். திருமண ஓலை எழுதுதல், சீமந்தம், புதிய பொருள்கள் வாங்குதல் புதிய சிகிச்சை மேற்கொள்ளுதல் புதிய கோயில்களில் சிலைகள் பிரதிட்டை செய்தல், செடிகள் நடுதல், வணிகம் தொடங்குதல், வேலையிற் சேர்தல், நீர் நிலை களை உருவாக்குதல் போன்ற நற்காரியங்கள் செய்வதற்கு உகந்த நாள் பங்குனி உத்தரத் திருநாள். எனவே இந்நாளில் நாமும் இறைவனை வழிபட்டு சகல நலங்களையும் பெறுவோம்.

**39ஆம் பக்க தொடர்ச்சி...**

கோயிலுக்கு அருகில் வந்ததும் இளைஞன் முத்தம்மையிடம் அவர்கள் பாடும் பஞ்சாமிர்த வண்ணம் என்னைக் கவர்ந்தது. அதைக் கேட்க வந்தேன். மேலும் அவர்களிடம் இசையையும் சேர்த்து பாடச் சொல்லவும்.

இப் பாடல் பாடும் இடமெல்லாம் கேட்க நான் வருவேன். இக் கோயில் தான் எமது இருப்பிடம் என்று சொல்லி இருவரும் மறைந்தனர். முத்தம்மையும் முருகன் தனக்கு காட்சி கொடுத்துப் பேசியதை நினைத்து பரவச நிலையை அடைந்தார். முருகனின் பேரருளை நினைந்து நினைந்து வணங்கினார். ஆனந்தம் அடைந்தார். முத்தம்மையாரும் நடந்த சம்பவத்தை பாடிய இரு அந்தணர்களிடமும் தெரிவித்தார். அவர்களும் முருகன் அம்மையாரின் அன்புக்கும் அருளுக்கும் கொடுத்த காட்சியை நினைத்து பெருமிதம் கொண்டனர். எதிர்பார்ப்பில்லாத உண்மையான பக்திக்கு இறைவன் காட்சி கிடைக்கும் என்பது இங்கு புலனாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்பன் சுவாமிகள்

திருமதி அமிர்தா தியாகலிங்கம்



நாம் இங்கு பார்க்கும் சுவாமிகள் மிகச் சிறந்த முருக பக்தர். முருகனுடன் நேரடியாகவும் கனவிலும் பார்த்தும் பகர்ந்தும் உறவாடியவர். அருணகிரிநாதரை தனது குருவாகப் பாவித்து வந்த பின்பு உபய அருணகிரி என்றும் பெயர் பெற்றார். ஆறுமுகமான முருகனை நினைத்து 6,666 பாடல்களையும் கட்டுரைகளையும் கொடுத்துள்ளார். பெரியபுராணம் போல் முருகன் புகழ் ஒலிக்கவும், பரவவும், பாடவும் சேய்த் தொண்டர் புராணம், முருகவேள் பன்னிரு திருமுறை உள்ளது.

பாம்பன் சுவாமிகளின் கதையும் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களும் மிகப் பெரியதும் உயர்வானவையாகும். இங்கு என்னால் முடிந்த அளவில் அவருடைய பெருமைகளைக் கூறு கிறேன். இங்கு சொல்லாமல் போகும் சில விடயங்களை மேலும் இவருடைய சரித்திரங்களைப் படித்து தெரிந்து கொள்வோம். படிக்கும் சகலருக்கும் முருகன் அருள் சுவாமிகளின் அநுக்கிரகத்தால் கிடைக்கட்டும்.

இவர் இராமநாதபுரம் பகுதியில் பாம்பன் ஊரில் அவதரித்தார். ஞானிகளுக்கும் சித்தர்களுக்கும் அவர்கள் பிறப்பு சரியாக தெரிய வருவதில்லை. அந்த வகையில் இவரும் எப்போது பிறந்தார் என்பது தெரியாது. இவர் தோன்றிய காலம் 1848 தொடக்கம் 1852 வரை என அறிவியலாளர்களும் சமய முன்னோடிகளும் சொல்லியுள்ளார்கள்.

இவரது பெற்றோர் சாத்தப்பப்பிள்ளை செங்கமலம் அம்மையார். அகம்படியார் குலம். பெற்றோர் இட்ட பெயர் அப்பாவு. துறவு பூண்ட பின் பெற்ற பெயர் அத்தியாச்சிரம சுத்தாத்துவைத வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமாரகுருதாச சுவாமிகள். மிக நீண்ட பெயர். எல்லோராலும் பாம்பன் சுவாமிகள் என அன்பாக அழைக்கப்பட்டார்.

இளமையில் அருகில் உள்ள ஒரு கிறிஸ்துவ பாடசாலையில் படித்தார். தமிழ், ஆங்கிலம், வடமொழி சமஸ்கிருதம் என்பவற்றில் புலமையுடன் தேறி ஆசிரியர்களின் பாராட்டுதல்களையும் நன்மதிப்பையும் பெற்றார். முனியாண்டிப் பிள்ளை என்பாரிடம் தமிழையும் சேதுமாதவ ஐயரிடம் சமஸ்கிருதத்தையும் மேலும் கற்றார்.

சிறு வயதிலே கந்தர்சஷ்டி கவசம் ஆறு பாடல்களையும் ஒவ்வொரு பாடலையும் ஆறு முறையாக முப்பத்தாறு முறை பாடுவார். இதனால் கவி பாடும் புலமை பெற்றார். பின்னாளில் சண்முககவசம் பாடவும் இது உதவியாக இருந்தது.

இவருடைய 13- 14 வயதளவில் முதல் பாடல் தென்னந் தோப்புக்குள் எழுத்தாணி கொண்டு பனை ஓலையில் எழுதிய "கங்கையைச் சடையில் பதித்து" என்பதாகும். பின்னாள்களில் அறிஞர்கள் எல்லாம் இப்பாடல் சொற்சுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்சுவை நிறைந்ததெனப் பாராட்டினார்கள். ஒவ்வொரு நாளும் உணவிற்கு முன் ஒரு பாடல் என பாடல்களை எழுதி வந்த சுவாமிகள் ஒரு நாள் குடும்ப நண்பர் சேதுமாதவ ஐயரிடம் தன் பாடல்களைக் காண்பித்தார். இவரின் திறமையைக் கண்ட ஐயர் அவர்கள் விஜய தசமியன்று அக்கினி தீர்த்தமான இராமேஸ்வரம் கடலில் தீர்த்தமாட செய்வித்து முருகனின் சண்முக சடாட்சரம் ஆறெழுத்து சரவணபவ மந்திரத்தை உபதேசம் செய்தருளினார். வேறு மந்திரங்களை படிக்கக் கூடாதெனவும் கட்டளையிட்டார். இதனால் தான் படித்து வைத்திருந்த விஷக்கடி நீக்குவது, குளிர்ச்சுரம் விலக்குவது போன்ற சில மந்திரங்களை விட்டொழிந்தார்.

இவரின் சிறு வயதில், ஜோதிடர் ஒருவர், இவர் நல்ல ஆன்மிகப் பலம் பெற்று, பின்பு போற்றப்படும் ஞானியாகவும் வருவார் எனக் கூறினார். தந்தையாரின் வியாபாரத்திலும் விவசாயத்திலும் துணை நின்றார். ஆன்மீகத்தில் நாட்டம் சென்றதால் துறவறம் மேற்கொள்ள நினைத்தார். அப்போ பெற்றோரினதும், குரு சேதுமாதவ ஐயர் அவர்களினதும் வேண்டு கோளுக்கு இணங்க மதுரை சின்னக்கண்ணு என்பாரின் மகள் காளிமுத்தம்மாவை 1878ம் ஆண்டு இருபத்தாறு வயதின் மேல் திருமணம் செய்தார். முருகையாபிள்ளை, சிவ ஞானாம்பாள், குமரகுருதாச பிள்ளை என இரு ஆணும் ஒரு பெண்ணும் பிறந்தனர்.

ஒரு நாள் இவருடைய பெண் குழந்தை நோய் கண்டு இரவு முழுவதும் தூங்காமல் அழுது கொண்டிருந்தது. மனைவி திருநீறு மந்திரித்து தரும்படி வேண்ட தான் சேதுமாதவ ஐயரின் தீட்சையின் பின் செய்வதில்லை என்றும் முருகனை வேண்டு பலன் உண்டு என்றும் சொல்லி வைத்தார். மனைவியும் முருகனை வேண்ட ஒரு முதியவர் வந்து குழந்தைக்கு திருநீறு பூசி மறைந்தார். குழந்தையும் அழுகையை நிறுத்தியது. மனைவியும் இவரிடம் நடந்ததைக் கூற முருகனைத் தொழுதார்.

இவ்வாறு இருக்கையில் இவருடைய தந்தை சிவப்பேறு எய்தினார். சுவாமிகள் தந்தையின் வியாபாரம் நிலபுலன்களை கவனிக்க வேண்டியதாயிற்று. இக்காலத்தில் பல வழக்குகளை எதிர்கொண்டு முருகன் அருளால் எல்லாவற்றிலும் வெற்றிகொண்டார்.

கர வருடம் (*1891*) ஆடி வெள்ளியன்று தன் நண்பர் அங்கமுத்துப்பிள்ளை என்பவரிடம் தான் பழனிக்குப் போவதாகவும் திரும்பி வருவது எப்போது என்பது தெரியாது என்றும் சொல்லியுள்ளார். சுவாமிகளின் குடும்ப நிலையை யோசித்த, நேசித்த நண்பர் அவரிடம் இப்போது போக வேண்டாம் என்று வேண்ட, சுவாமிகளோ இது முருகன் கட்டளை எனப் பொய் பகன்றார். அன்றே முருகன் சினத்துடன் தோன்றி, "ஏன் பொய்யுரைத்தாய்? உன்னை பழனிக்கு எப்போ கூப்பிட வேண்டும் என்பது எனக்குத் தெரியாதா? நான் அழைக்காமல் நீ இனியும் வர எண்ணாதே" என்று கூறி மறைந்தார். சுவாமிகளும் முருகனிடம் மன்னிப்புக் கேட்டு, துறவற ஆசையால் இப்படி செய்துவிட்டேன் என்றும் அழைக்காமல் வரமாட்டேன் என்று உறுதி மொழிந்தார். பல தலங்களுக்கும் சென்ற சுவாமிகளைப் பழனிக்கு முருகன் கடைசிவரை அழைக்கவில்லை.

ஒரு நல்ல கோடை வெப்ப நாளில் சூடு மிகுந்த மணலில் தோப்புக்களைப் பார்க்கச் சென்ற போது அவரது கால்களில் முட்கள் தைத்து சிரமத்துக்குள்ளானார். அன்றிரவு முருகன் ஒரு ஆசாரியிடம் கனவில் சென்று இவருக்கு ஒரு பாதக்குறடு (பாதணி) செய்து கொடுக்கும்படி கூறி மறுநாள் இவர் வருத்தத்தை நீக்கினார். முருகனின் கருணையை எண்ணி துதித்தார் மகிழ்ந்தார்.

இக் காலங்களில் சுவாமிகளிடம் நம்பிக்கையும் ஈர்ப்பும் ஏற்பட்டு சிலர் சீடர்களாயினர். சுவாமிகளும் உப்பு, புளி, காரம் என்பன விலக்கி அரிசியும் சிறு பயறும் கலந்த அன்னத்தை மதிய வேளையில் மட்டும் எடுத்துக் கொண்டார். உடனிருந்தவர்கள் உப்பில்லாவிடில் உடல் நலம் கெடும் என்று சொல்ல முருகனின் திருவருள் படி உப்பை தவிர்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கனவுகளை கண்டார். கனவிலே ஒரு பெரியவர் பாலும் சோறும் கொடுத்தார். பின் கவிதைகள் புனைவது இலகுவானது என்றார் சுவாமிகள். கனவிலே நரகம் சுவர்க்கம் வேறுபாட்டைக் கண்டார். தமது இல்லத்தில் ஒரு இஸ்லாமிய நண்பருடன் இருக்கையில் குறி சொல்லும் பெண் இவருக்கு ஆண்டி அருளால் வழக்குகளில் வெற்றி கிடைக்கும், ஆண்டி முருகனே அவனை மறவாதே என்று சொல்லி சுவாமிகளிடம் இருந்து புது வஸ்திரம் பெற்றுச் சென்றார்.

சுவாமிகள் குத்தகைக்கு காடுகளை எடுத்து மரம், விறகு வியாபாரமும், தென்னந் தோட்டங்களை எடுத்து தேங்காய் ஓலை மட்டைகள் வியாபாரமும் செய்து வந்த போது கள்வர்கள் மீது நடந்த வழக்குகளில் வெற்றி பெற்றார்.

**சண்முககவசம் பாடல்**

தன் துன்பங்கள் நீங்கவும் கவலைகள் போகவும் உயிர் எழுத்துக்கள் 12, தொடக்க உயிர்மெய் எழுத்துக்கள் 'க' தொடக்கம் 'ன' வரை உள்ள 18 எழுத்துக்களையும் ஆரம்பமாக (அகரம் முதல் னகரம் வரை) 30 பாடல்களைக் கொண்ட சண்முக கவசம் பாடி தொல்லை களில் இருந்து விடுபட்டார். இதனை இராமேஸ்வரத்தில் 1891ம் ஆண்டு கார்த்திகை மாதம் பாடினார். சண்முககவசத்தின் சிறப்புக்கள் பல. உள்ளன்புடன் தினமும் ஆறு முறை பாடி வந்தால் நோய்கள் நீங்கும். கவலைகள் மறையும். நிம்மதி கிடைக்கும். துன்பங்கள் விலகும். இக் கவசம் பாடி பாம்பன் சுவாமிகளின் முறிந்த கால் எலும்பு குணமானதை 1923இல் ஆங்கில மருத்துவரும் மற்றவர்களும் சென்னை வைத்திய சாலையில் நடந்த அற்புதத்தைக் கண்டு கொண்டனர். மருத்துவ மனையில் நடந்த அற்புதங்களை பிறகு பார்ப்போம். இங்கு இதை சொல்வது நலமாகும். அப்போது வைத்தியசாலையில் சுவாமிகள் இருந்த அறையில் வைக்கப்பட்ட சுவாமிகளின் படம் இன்றும் 98 ஆண்டுகளாக தினமும் பூசிக்கப்பட்டு வருகின்றது.

சண்முககவசம் 1891 தமிழ் கர வருடம் கார்த்திகை ஞாயிறு 8ம் திகதியிலும் பதினாறு நாள்களின் பின் பஞ்சாமிர்தவண்ணமும் பாடியருளினார்கள்.

**பஞ்சாமிர்தவண்ணம் பாடல்**

கோயிலுக்குச் சென்று முருகனுக்கு அபிஷேகம் செய்ய முடியாதவர்கள் அப் பலனை அடையும் விதமாக இப் பாடல்களை அருளினார். இப் பாடல்கள் பஞ்சாமிர்தத்தை விட சுவை மிகுந்தவை என்பார்கள். நல்ல சந்தங்களைக் கொண்ட ஐந்து வகைப் பாடல்கள். இங்கு பால்(4) தயிர்(8) நெய்(4) சர்க்கரை(4) தேன்(4) முதலான 24 பாடல்கள் மிக அருமையான கருத்துடன் இனிமையான இசையுடன் கூடி வந்துள்ளன. முருகனுக்கு மிக பிடித்தமானதும் முருகனே இப் பாடல் பாடும் இடங்களில் எல்லாம் நான் பிரசன்னமாவேன் என்று திருவாய் மலர்ந்ததாகவும் கதைகள் உண்டு. திருச்செந்தூர் ஆலயத்தில் அர்ச்சகர் அநந்த சுப்பையரும் நண்பர் சுப்ரமண்ய ஐயரும் ஆலய மண்டபத்தில் நெடுநேரம் பஞ்சாமிர்த வண்ண பாடல்களை இராகத்துடன் தினமும் பாடினர். இவர்களுடன் வயதான முத்தம்மை என்ற அம்மையாரும் சேர்ந்து பாடல்களை கேட்டுக் கொண்டு இருந்தார்கள்.

**முருகன் நேரில் வருதல்**

1918-ம் ஆண்டு சித்திரை மாதம் வியாழக்கிழமை இரவு எட்டு மணிக்கு ஒரு இளைஞனும் தூணின் மறைவில் நின்று பாடலை கேட்பதை முத்தம்மையார் கண்டார்கள். அவனை கூப்பிடச் சென்றால் அவனைக் காணவில்லை. மறுநாள் விடியற் காலை பாராயணத்தின் போது அதே இளைஞன் மண்டபத்தினுள் வர, முத்தம்மை அவனருகே சென்று, நீ யாரப்பா என வினவ அவனோ நானும் இந்த ஊர் தான். என்னுடன் வந்தால் என் இருப்பிடம் காட்டுவேன் என்றான். முத்தம்மையும் போனார். முத்தம்மை பின்தொடர சென்ற இளைஞனுடன் ஒரு இளம் பெண்ணும் சேர்ந்து கொண்டாள்.

**36ஆம் பக்கம் பார்க்க**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரா பௌர்ணமி விரதம்

## செல்வி இ.இராமலிங்கம்

“விரதம்” என்பது ஒன்றையே எண்ணி அதில் மனம் நிலைத்திருக்கச் செய்தலாகும். வரிப்பது- விரதம். உணவொழித்திருத்தலும் மிதமாக உண்டலும் தீயன நீக்கி நல்லன உண்டலுமாகிய உணவு நியமமே விரதம் என வழங்குகிறது. அலையும் மனத்தை அடக்கி நிறுத்தி இறைவன் திருவடியில் நிலைத்திருத்தலே சிறப்பாகும். மனம் பொறிவழி செல்லாது தடுத்தல், புலனொடுக்கம் வாழ்க்கையின் செம்மைக்குத் தேவையானது. பொறிகள் அடங்க வேண்டுமானால் உணவு ஒடுங்க வேண்டும். “அன்னம் அடங்க அஞ்சும் அடங்கும்”. இன்று உடல் நலம் பேணும் மருத்துவர்கள் கூட வாரத்தில் ஓரிரு நாட்கள் உணவைத் தவிர்ப்பது நன்மை பயக்கும் என்று கூறுகின்றார்கள். உடலின் மூலமாகத்தான் உத்தமனைத் தேடவேண்டும். உடலின் இன்றியமையாமையை திருமூலர்,

உடம்பை முன்னர் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே

என்று கூறுவார்.

சித்திரா பௌர்ணமி விரதம் பிதுர்களுக்குரிய விரதமாகும். தாய்க்குரிய கிரகம்(மாதுருகாரன்) சந்திரன். எனவே சந்திரன் நிறை மதியாக இருக்கும் நாள் அவனுக்குரிய விசேடதினமே. அதிலும் சித்திரை மாதப் பௌர்ணமி தினம் மேலும் விசேடமானது. சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தோடு சந்திரன் கூடி நிற்கும் காலம் எவ்வளவு சிறந்தது என்பதைக் கூறவேண்டியதில்லை. இறந்த தாயின் ஆன்மா முத்தியடைதற் பொருட்டு, பிள்ளைகளால் சித்திரா பௌர்ணமி விரதம் அநுட்டிக்கப்படுகிறது. இதே நாளில் சித்திரபுத்திரனார் விரதமும் வருகிறது. இத்தினத்தில் விரதமிருத்தல் மிகவும் சிறப்பானது என திருவிளையாடற்புராணம் கூறுகிறது. மேலும் இந்நாளில் இந்திரன் சிவனை வணங்கித் தன் தீவினைககள் நீங்கப் பெற்றான் என்றும் இந்நாளை, தான் தொடர்ந்து பூசிக்க அருளுமாறும் சிவனை வேண்டிக் கொண்டான் என்றும் திருவிளையாடற் புராணம் கூறுகிறது. அப்போது சிவன் “ருதுக்களில் சிறந்த வசந்த ருதுவும், மாதங்களில் சிறந்த சித்திரை மாதமும் நட்சத்திரங்களில் சிறந்த சித்திரை நட்சத்திரமும் திதி களில் சிறந்த பௌர்ணமி திதியும் கூடும் சித்திரையில் நம்மைப் பூசித்தால் முன்னூற்று அறுபத்தைந்து நாள்களும் பூசை செய்த பலன் கிட்டும். நீ சுவர்க்கம் செல்வாய், மலபரிபாகம் உண்டாகும்.” என்று அருளினார் என்பது வரலாறு. அதன்படி இந்திரன் அந்நாளில் பூசித்து வரலானார்.

சித்திரைப் பௌர்ணமி விரதம் நம்மைப் பாவகாரியங்களில் இருந்து விலக்கி புண்ணிய சீலராக்குவதற்கான பக்குவத்தை அளிக்கின்றது. எனவே சித்திரைப் பௌர்ணமி தினத்தையும் அதன் தாற்பரியங்களையும், பெருமைகளையும் தெரிந்து இப்புண்ணிய தினத்தில் உபவாசமிருந்து அநுட்டிப்பதனால் இறந்த தாயாரின் ஆன்மா நற்கதியை அடைகிறது. அத்துடன் இக்காலத்தில் சிவனைத் தியானித்து வழிபடுபவர்கள் தாமும் நற்பேறு எய்துவரெனக் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின் திருக்குறள் 334

ஒவ்வொரு நாளும் நம் வாழ்வைக் கூரிய வாளொன்று வந்து அழித்துக் கொண்டே போகிறது. இவ்வழிவுகள் பாவங்கள் போன்றவற்றிலிருந்து நம்மைச் சித்திரைப் பௌர்ணமி விரதம் காத்தருளும் என்பதால் இவ்விரதத்தின் முக்கியத்துவம் புலனாகின்றது.

சித்திரை மாதப் பூரணயும் சித்திரை நட்சத்திரமும் சேர்ந்து வரும் நாள் "சித்திர குப்த" விரதநாளாகும். தருமதேவதையாகிய யமதர்மராஜனது கணக்குப்பிள்ளை சித்திரகுப்தன், நாம் செய்து வரும் பாவ, புண்ணியங்களைத் தவறாது எழுதி அதற்குரிய பலனை அளிப்பவர். ஆலயங்களில் சித்திரகுப்தனார் கதை படித்து சித்திரைக் கஞ்சி செய்து இறைவனுக்குப் படைத்த பின்பு அடியார்கள் அனைவரும் உண்டு மகிழ்வர். இவ்விரதத்திற்கு கடுமையான விதிமுறைகள் கிடையாது. உப்பைத் தவிர்த்துப் பசும்பால், பசுமோர் ஆகியவற்றை விலக்குதல் சிறப்பு. இதனால் பாவச்சுமை குறையும். நரகவேதனை இல்லாது ஒழியும்.

புகழேந்திப்புலவர் தமிழில் பாடிய சித்திரபுத்திரனார் கதையே தழிழகத்திலும், இலங்கையிலும் பெருமளவு படித்துப் பயன் சொல்லப்படுகிறது. சித்திரபுத்திரனார் கதையானது வெண்பா, விருத்தப்பாக்களால் பாடப்பட்டுள்ளது. அது விநாயகர் காப்பு, சித்திரபுத்திரனார் கதை, மார்க்கண்டேயர் கதை, அமராவதி கதை அமைப்பு முறையில் காணப்படுகிறது.

ஒவ்வொருவரும் செய்த புண்ணியங்களுக்கேற்பவும் சுகபோகங்களும் கிடைக்கின்றன. சிவ விரதம் இருத்தல், குருபக்தி, பசுவை தெய்வமாக வணங்குதல், பெற்றோரை வணங்குதல், நோயுற்றவர்களுக்கு மருந்து கொடுத்தல் போன்ற நற்செயல்களையும் செய்வோர் சுவர்க்கத்தில் நற்பேறுகளைப் பெறுவர். இவர்கள் திருக்கைலாயத்திற்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள். தேவர்களைப்போன்று சிறப்பாக உபசரிக்கப்படுவர்.

மார்க்கண்டேயர் கதையில் சிவலிங்கத்திலிருந்து வெளிவந்த சிவபெருமான் இயமனைச் சங்காரம் செய்தார். மார்க்கண்டேயருக்கு என்றும் பதினாறு வயதுடன் இருக்க அருள் புரிந்தார். இயமன் இறந்தமையால் பூமியில் உயிரினங்கள் அதிகரித்தன. பாரம் தாங்காமல் பூமாதேவி வருந்தி சிவனிடம் முறையிட்டாள். பிரமனும் படைப்புத் தொழிலை செவ்வனே ஆற்றமுடியாது சிவனிடம் முறையிட்டார். சித்திரபுத்திரனாரும் இயமனை உயிர்ப்பிக்குமாறு சிவனை வேண்டினார். இவர்களது வேண்டுதல்களை ஏற்ற சிவபெருமான் இயமதர்மராஜனை உயிர்ப்பித்தார். உயிர் பெற்ற இயமனும் சித்திரபுத்தனாரும் யமலோகம் செல்கின்றனர்.

அமராவதி கதையில் வரும் அமராவதி செல்வங்கள் வாய்க்கப்பெற்ற செட்டியாரின் மனை வியாவார். அவள் பல தானதர்மங்களைச் செய்து வந்தாள். விரதங்கள் எதனையும் நோற்கவில்லை. அதனால் கோபம் கொண்ட சித்திரபுத்திரனார் அமராவதியை எமலோகம் அழைத்து வருமாறு கட்டளையிட்டார். மூன்று தடவைகள் வெவ்வேறு தூதுவர்கள் சென்றும் அவளது உபசரணையையும் தானதர்மங்களையும் கண்டு அவளிடத்தில் நெருங்க முடியவில்லை. ஈற்றில் பசுவின் கொம்பு முட்டி இறக்கின்றாள். யமலோகம் அழைத்துவரப்பட்ட அவள் செக்கிலிட்டு ஆட்டும்போது அவள் கால் உடைகிறது. அவ்வேளை அந்தணர் ஒருவர், "சித்திரபுத்திரரை வழிபடாது, தானதர்மங்கள் செய்தால் பலன் இல்லை" என அமராவதிக்கு அறிவுரை பகர்ந்தார். அமராவதி சித்திரபுத்திரனார் விரதமிருந்து அருள் பெற்றாள். மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூலோகம் சென்று உயிர் பெற்று சித்திரபுத்திரனார் விரதம் நோற்று சிவலோகம் அடைந்து முக்தி பெற்றாள். தானதர்மம் செய்வதோடு மட்டும் நின்றுவிடாது. சித்திரபுத்திரனார் விரதமும் அவசியம் பிடிக்க வேண்டும் என்பது இங்கே வலியுறுத்தப்பட்டுள்ளது.

சித்திரபுத்திரனாரின் வலது கையில் எழுத்தாணியும் இடது கையில் ஏடும் காணப்படும். பாவபுண்ணியக் கணக்குகளை எழுதும் புத்தகத்தை "அக்கிரசந்தாணி" எனக் குறிப்பிடுவர். இவருக்கு ஆலயம் அமைத்து வழிடும் மரபு இந்தியாவில் காணப்படுகிறது. இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் உலகப்புகழ்பெற்ற கஜீராசோ ஆலயம் தமிழகத்தில் காஞ்சிபுரம், தேனீ ஆகியன குறிப்பிடத்தக்கவை. ஈழத்தில் சித்திரபுத்திரனாருக்கு ஆலயங்கள் அமைக்கப்படவில்லை.

சித்திரபுத்திரனாரின் கதையைப் படித்து முடிப்பவர்களின் குலமானது ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி, மூங்கில் போலச் சுற்றங்கள் சூழ்ந்திருக்க பூவுலகத்தில் பலம் பொருந்திய செல்வம் வாய்க்கப் பெற்று இன்பகரமாக வாழும். மேலும் நடராசப்பெருமானது திருவடிகளை அடையும் பாக்கியம் பெற்றவர்களாகவும் காணப்படுவர் என நூற்பயன் குறிப்பிடுகிறது. மேலும் சித்திபுத்திரரை வழிபடுதல் ஊடாக தெரிந்தோ தெரியாமலோ செய்த பாவங்களின் பலன் குறையும். உடல் நலன் சீராக இருக்கும். புண்ணியம் கைகூடும். வாழ்வில் செல்வம் செழிக்கும். ஊர்மக்கள் அனைவரும் ஒன்றுகூடி வழிபாட்டை மேற்கொள்வதன் ஊடாக ஆன்மிகப் பக்குவம், ஒற்றுமை, அறிவியல் நன்மைகள் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

# இதுவும் தமிழ்!

நான் ஒருமுறை சமயப் பிரசங்கம் செய்வதற்காக யாழ்ப்பாணம் போயிருந்தேன். அப்போது என்னை அழைத்தவர் வீட்டு முதியவர் ஒருவர் இயற்கை எய்திவிட்டார். அதனால், காலையிலே அவர் வீடுசென்று துக்கம் விசாரித்து வந்தேன். அப்போது ஒரு பணியாள் வந்து, "சுவாமி தோஞ்சாச்சா? சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா?" என்றார். எனக்கு விளங்கவில்லை. "தோஞ்சாச்சா, தோஞ்சாச்சா" என்று திரும்பத் திரும்ப அவர் கேட்டார். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

அந்தப் பணியாள் சென்று ஒரு படித்த பெண்மணியை அழைத்துவந்தார். அந்த அம்மா என்னிடம், "சுவாமி துக்கவீட்டுக்குப் போய்வந்திர்களே! தோய்ந்துவிட்டீர்களா என்று இவன் கேட்கிறான். நீங்கள் ஸ்நானம் பண்ணிவிட்டீர்களா?" என்று கேட்டார்.

எனக்கு வெட்கமாகப்போய்விட்டு. **தோய்தல் என்பதே நீராடுதல் என்பதற்குச் சரியான தமிழ் வார்த்தை. தோய்தல் என்றால் ஒன்றிலே முழுமையாக அமிழ்ந்துபோதல் என்று பொருள்.**

அந்தத் தொல்காப்பியத் தமிழை ஒரு வேலைக்காரனே சாதாரணமாகப் பேசுகிறான். யாழ்ப்பாணத்தில் தூய தமிழ் வாழ்ந்துகொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் அல்ல. அது யாழ்ப்பாண மக்களாலேயே பேசப்படுகின்றது. அங்குதான் அது வாழ்கிறது.

**-திருமுருக கிருபாநந்தவாரியார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாசிவராத்திரி

சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன் M,A.,J.P..



உலகத்தின் பரம்பொருளாக, கர்த்தாவாக விளங்குபவர் சிவபெருமான். கல் தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்பே சிவபெருமான் இருந்தார். சிவன் ஆதியும் அந்தமும் இல்லாதவர். சிவன்தான் உயிர்களுக்காக தனு எனும் உடல்கள், கரணம் என்னும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற அறி-கருவிகள், புவனம் என்னும் உலகங்கள், நீர், நிலம், காற்று, நெருப்பு போன்ற போகப் பொருள்களையும் படைத்தார்.. இத்தகைய செயல்களை எமக்காகச் செய்கின்ற சிவபெருமானை நாம் வழிபட்டு இவ்வுலக நன்மை-களையும் முத்தியையும் பெறவேண்டுமல்லவா? சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவோர் சைவசமயத்தினர். அவர்களின் வழிபாட்டுச் செயல்கள் பல காணப்படுகின்றன. இவற்றில் ஒன்று விரதமாகும். விரதங்கள் ஒவ்வொரு தெய்வங்களுக்கும் சிறப்பாகக் காணப்படுகின்றன.

சிவ விரதங்கள் ஆனி உத்தரம், பங்குனி உத்தரம், சோமவாரம், திருவெம்பாவை, மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், மகாசிவராத்திரி, உமாமகேஸ்வர விரதம், கேதாரகௌரி விரதம், சூலவிரதம், இடப விரதம் எனப் பலவகை உண்டு. இவற்றுள் மகாசிவராத்திரி தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். உலகம் எங்கும் வாழும் இந்துக்கள் மட்டுமன்றி சிவபக்தி உடைய வேற்று சமயத்தவர்களும் சிவராத்திரி விரதத்தைக் கடைப்பிடித்துப் பயன் பெற்று வருகிறார்கள். சிவராத்திரி விரதமானது மகா சிவராத்திரி, யோக சிவராத்திரி, நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி எனப் பல வகைப்படும். மகா சிவராத்திரியானது மாசி மாதம் தேய்பிறை 14ஆம் நாள் சதுர்த்தசி திதியில் வரும்.

முன்னொரு காலத்தில் சர்வசங்கார காலம், அல்லது பிரளய காலத்தில் உயிர்கள் உடம்புகளின்றி செயற்படாது இருந்தன. எங்கும் அமைதி நிலவியது. ஊழி ஒடுக்கத்தில் பஞ்சபூதங்களின்றி பிரமன், விஷ்ணு முதலிய தேவர்களுமின்றி, சக்தியுமின்றி சிவபெருமான் மட்டுமே தனித்து நின்ற காலம். அந்தக் காலம் மகாசிவராத்திரி எனப்படலாயிற்று. ஒடுங்கிய உலகத்தையும் உயிர்களுக்கான உடல்களையும் மீளத் தோற்றுவிப்பதற்காகச் சிவபெருமான் சோதி வடிவில் இலிங்க ரூபமாய் நின்று லலிதாதேவி என்னும் பெயரோடு சக்தியாகிய உமையைத் தோற்றுவித்தார், அத்தேவி சிவலிங்கப் பெருமானை வணங்க, அவர் சிவலிங்கோற்பவராகத் தோன்றி உலகத்தை மீளவும் படைக்கச் சித்தம் கொண்டார். பிரம்ம விஷ்ணுக்களைப் படைத்து, சிருஷ்டித் தொழிலைப் பிரம்மனும் காக்கும் தொழிலை விஷ்ணுவும் செய்யும்படி ஆக்கினார். இந்நாளே மகாசிவராத்திரி நாளாகும்.

இன்னொரு வரலாறும் உண்டு. ஒரு சமயம் பிரமாவும் விஷ்ணுவும் அகந்தை கொண்டு தாமே பெரியவர் என ஒருவருக்கொருவர் சண்டை செய்தனர். அக்காலத்தில் சிவபெருமான் சோதிப் பிழம்பாகத் தோன்றி, இந்தச் சோதியின் அடிமுடியைக் காண்பவர்தான் பெரியவர் என அசரீரியாகச் சொன்னார். உடனே பிரம்மா அன்னப்பட்சி வடிவம் கொண்டு முடியைக் காண்கிறேன் என்று வானத்தில் மேலே மேலே பறந்து சென்றார். விஷ்ணு பன்றி வடிவம் எடுத்து சிவனது திருவடியைக் காண மண்ணை அகழ்ந்து கீழே கீழே சென்றார். பிரம்மன் சிவனது முடியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து தவறி கீழே விழுந்து கொண்டிருந்த தாழம்பூவை எடுத்துக் கொண்டு வந்து நான் முடியைக் கண்டேன் எனப் பொய் கூறினார். விஷ்ணு அடியைக் காணாது களைத்து வந்தவேளை பெருஞ்சோதி குறுகி குளிர்ந்து ஒரு வடிவமாகியது(லிங்கம்). இதற்குள் சிவன் தன் பாதத்தையும் முடியையும் காட்டாது தன் உருவைக் காட்டினார். இவ்வடிவமே இலிங்க உற்பவர் இலிங்கோற்பவர் வடிவமாயிற்று.

செங்க ணானும் பிரமனும் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலர்
இங்குற் றேன் என்று இலிங்கத்தே தோன்றினார்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே - நாவுக்கரசர்

பிரம்மா விஷ்ணுவிற்கு முன் சோதி வடிவாய்த் தோன்றிய நாள் திருக்கார்த்திகைத் தீபத்திருநாளாகும். இச் சோதி தோன்றிய இடம் திருவண்ணாமலையாகும். இதனாலேயே திருவண்ணாமலை “தீ”த்தலமாகப் போற்றப்படுகிறது. பலகாலம் பிரமவிஷ்ணுக்கள் அடிமுடி தேடிக் களைத்து வந்தபோது சிவன் இலங்கோற்பவராகக் காட்சி கொடுத்த நாளே ஒரு மாசி மாதத் தேய்பிறை 14ஆம் நாள் சதுர்த்தசி திதி நள்ளிரவாகும். இந்நாளே மகாசிவராத்திரி விரதமாகக் கொண்டாடப்படுகிறது.

மகாசிவராத்திரி விரதத்தின் மகிமையைக் கூற ஒரு கதையுண்டு., ஒருநாள் ஒரு வேடன் காட்டுவழியாக மாலைவேளை வந்தபோது ஒரு புலி அவனைத் துரத்திக் கொண்டு வந்தது. வேடன் தப்பிக்க ஒரு மரத்தில் மளமளவென்று ஏறிவிட்டான். புலியோ மரத்தின் கீழ் வேடனைப் பார்த்த வண்ணமாக நின்றது. இரவுப்பொழுது வந்ததும் வேடன் நித்திரை தூங்கி விழாதிருக்கவும் புலியிடம் அகப்படாதிருக்கவும் கொப்புக்கொப்பாகத் தாவி ஒவ்வொரு இலையாகப் பறித்துக் கீழே போட்டுக்கொண்டிருந்தான். தன்னைப் பாதுகாக்குமாறு சிவபெருமானை நினைந்துருகினான். உணவின்றி, தூக்கமின்றி விடியும்வரை இருந்த வேடன் விடிந்ததும் பார்த்தான் புலியைக் காணவில்லை. கீழே இறங்கி வந்தான். மரமோ வில்வமரம். பறித்துப்போட்டதோ வில்வமிலை. மரத்தின் அடியில் சிவலிங்கம் காணப்பட்டது. இந்த நாள்தான் சிவராத்திரி விரத நன்னாளாகும். இதனால் வேடன் சிவகதி பெற்றான்.

மேலும் சிவராத்திரி விரதமானது அகந்தையுடையோர் சிவனைக் காணமாட்டார் என்பதையும், பொய் கூறியதால் பிரமனுக்கு கோயில் வழிபாடு இல்லை என்பதையும் பொய்ச்சாட்சி கூறியதால் தாழம்பூ சிவபூசைக்காகாதெனவும் எமக்கு நல்விழுமியங்களைக் காட்டி நிற்கிறது.

சைவர்கள் எல்லோரும் மகாசிவராத்திரி விரதத்தை அநுஷ்டிக்க வேண்டும். சிவராத்திரிக்கு முதல்நாள் சைவாசாரசீலராக சிவசிந்தனையோடு ஒருபொழுது உண்டு சிவராத்திரியன்று அதிகாலையில் துயிலெழுந்து, நீராடி, தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து நித்திய கர்ம அநுஷ்டானங்களை முடிக்கவேண்டும். பின்னர் வீட்டில் பூசை வழிபாடுகளைச் செய்து அன்று முழுதும் உணவின்றி சிவாலயம் சென்று தொண்டுகள் செய்வது நன்று. பூசை வழிபாடுகளில் கலந்து, சிவபுராணம், திருமுறைகளை ஓதலாம் அல்லது கேட்கலாம். பஞ்சாட்சர ஜபம் செய்தலும், சிவாலயத்தை பலதடவைகள் வலம் வருதலும், இரவுமுழுதும் கண்விழித்து வழிபடுவதும், இரவுமுழுதும் நடைபெறும் நான்கு ஜாமப் பூசைகளைப் தரிசிப்பதும் முக்கிய வழிபாடாகும். வயது முதிர்ந்தவர்கள் நித்திரை விழித்திருக்க முடியாவிட்டால், சிவன் இலிங்கோற்பவராகத் தோன்றிய நள்ளிரவுப் பூசை முடிந்ததும் சற்று நேரம் தூங்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பூசையில் இரவு 11.45 மணிமுதல் 12.30 மணிவரை உள்ள காலம் இலிங்கோற்பவ காலம் எனப்படும். இக்காலத்தில் சிவாலயங்களின் கருவறையின் பின்னால் வெளிப்புறச்சுவரில் மேற்கு நோக்கிப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் இலிங்கோற்பவருக்கு விசேட அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், தூபதீப ஆராதனைகள், அர்ச்சனைகள், தோத்திரம், வாழ்த்து எனபன சிறப்பாக நடைபெறும். இவற்றில் பங்குபற்றுவதும் வழிபடுவதும் சிறப்பானதாகும்.

மறுநாள் அதிகாலையில் தீர்த்தோற்சவம் நடைபெறும். சிவன் தீர்த்தமாடிய நீரில் அடியார்கள் தீர்த்தமாடி பாவங்களைக் கழுவி, நித்திய கர்ம அநுஷ்டானங்களை முடித்து சிவார்ச்சனை செய்வித்தல் வேண்டும். பின்னர் வீடுவந்து உணவு சமைத்து சிவனடியார்களுக்குக் கொடுத்து காலை 8.30 மணிக்கு முன் உணவுண்ணல் வேண்டும். இது பாரணை எனப்படும். அதாவது விரதத்தை நிறைவுசெய்தல் ஆகும். மறுநாள் பகலிலும் நித்திரை செய்தல் கூடாது. சிவராத்திரி விரதத்தைக் கடைப்பிடிப்போர் கல்வி, செல்வம், திருமண பாக்கியம், புத்திர பாக்கியம் வேலைவாய்ப்பு என வேண்டிய வரங்களைப் பெறலாம்.

உலகமெங்கும் உள்ள சிவாலயங்கள் மட்டுமன்றி ஏனைய ஆலயங்களிலும் மகாசிவராத்திரி விரதம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இந்தியாவில் சிதம்பரம், திருவண்ணாமலை, திருவாரூர், திருக்காளத்தி, திருவானைக்கா, இராமேஸ்வரம் எனப் பல சிவ ஆலயங்களிலும் இலங்கையில் திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் போன்ற ஆலயங்களிலும் மகாசிவராத்திரி விரதம் சிறப்பாக அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. திருக்கேதீஸ்வரத்தில் அடியார்கள் பாலாவித் தீர்த்தத்தில் நீராடி ஈர ஆடையுடன் தலையில் பாலாவித் தீர்த்தக் குடத்தைச் சுமந்து வந்து புராதன சிவலிங்கத்திற்கு தாம்தாமே அபிஷேகித்து வழிபடுவர். அடியார்கள் பாலையும் பத்திர புஷ்பங்களையும் சேர்த்து அபிஷேகிப்பர்.

சிவராத்திரி விரதத்தைக் கடைப்பிடிப்போர் விரதத்திற்கு முதல் நாளும், விரதமன்றும், மறுதினமும் சைவ ஆசாரத்தைக் கடைப்பிடிப்பதும் எந்நேரமும் நெற்றியில் திருநீறு அணிந்திருத்தலும் சிவசிந்தனையோடு இருப்பதும் முக்கியமானதாகும். ஈழத்தில் மகாசிவராத்திரியை முன்னிட்டு பல சிவனடியார்கள் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து கால்நடையாக நடந்து வழியில் உள்ள பல ஆலயங்களையும் தரிசித்து திருமுறைகளைப் பாடிப்பாடி மகாசிவராத் திரியன்று காலையில் திருக்கேதீஸ்வர ஆலயத்தைச் சென்று தரிசிப்பார்கள்.

சிவராத்திரியன்று சிவனுக்கு அர்ச்சிப்பதற்கு சண்பகம், செங்கழுநீர், தாமரை, மல்லிகை, பிச்சி, புன்னை, பாதிரி. திருவாத்தி, முல்லை, கொன்றை, பொன்னொச்சி, குவளை, கடம்பு, செவ்வந்தி, வெள்ளெருக்கு, செவ்வரத்தை போன்ற பூக்களையும் வில்வம், விளாத்தி, முட்கிழுவை, பொன்னொச்சி, மாவிலங்கு போன்ற பஞ்சவில்வங்களையும் தேடித்தேடி எடுத்து வந்து கொடுப்பது மிகமுக்கியமானது. பால், தயிர், இளநீர் பன்னீர், நெய், தேன் போன்ற அபிஷேகப் பொருள்களை வழங்குவதும் புண்ணியத்தைத் தரும். சிவனுக்கு மலர் மாலைகள், பட்டு வஸ்திரங்கள், அர்ச்சனைப் பொருள்களைக் கொடுப்பதும் பெரும் புண்ணியத்தைத் தரும். நாமும் மகாசிவராத்திரியை முறையாகக் கடைப்பிடித்து சிவனருளைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வாங்கு வாழ்ந்து சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு பெற்று,

"சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ் பல்லோரும் ஏத்தப் பணிந்து" வாழ்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Krishna's Arguments

Nishaan Brahmananthan

[At the beginning of the Mahabharatha war, Arjuna was filled with moral dilemma and despair about the violence and death the war would cause in the battle against his own kin and therefore, he refused to fight. He surrendered to Lord Krishna and asked for his advice. Krishna's answers and his dialogue with Arjuna constitute the Bhagavad Gita]

What are some of the key arguments used by Krishna to convince Arjuna to fight? Do these arguments make sense in the contemporary world?



In the Bhagavad-Gita, Arjuna, the mightiest archer who is the best among all the other warriors during the eighteen days war which took place in the story Mahabharata, was facing a dilemma. He has been put in a situation where his foes are his own kinsmen, fathers, cousin brothers, grandfathers, uncles, grandsons and other men of his family and friends.

Arjuna's mind has become emotional about killing his relatives and friends. Because of this, his intellect has been subdued and he is unable to think clearly. At this crucial moment Arjuna surrenders to Krishna and asks for guidance. This leads to the preaching of the Bhagavad-Gita by Krishna, the omnipotent Lord, telling him 'what life is all about'. His advice strengthens Arjuna's intellect, clears his mind and enables him to perform his duty as a warrior, fighting to uphold Dharma.



Krishna's arguments:
Duty as a householder:
Everyone must do their duties according to their stage in life and profession. As students they should do their duty of acquiring knowledge, skills and discipline. As householders they should raise their family and carry out their responsibilities towards the society. After fulfilling their household responsibilities, one should spend more time on contemplating and seeking the Truth. As a renounced person, they should sacrifice all their activities to God.
Arjuna was at that time a householder. He had to fulfill his duties as a guardian of his family and play his role in his society. The Pandavas were denied their rightful share of half of the kingdom. They were even denied their least request of five houses to live. The society was looking up to them as princes to save them from the lawless reign of Duryodhana.

Duty as a soldier:
Arjuna was educated to uphold dharma. However, because he was in a confused state, he feared that by fighting the war, he might violate the rules of dharma and end up in hell.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dharma means Natural Law or ‘the correct course of action in a given situation’. The Pandavas had been forced to choose war, after various attempts to negotiate a settlement ended in failure. Krishna points out to him that a person’s profession should be chosen according to a person’s nature. In this case Arjuna was not only a soldier, but also a prince. He was in a position to influence the course of the war. It was his duty to uphold Dharma by any means available to him. War was chosen only as the last resort.

Atman does not die:
Arjuna fears that sin will come to him by killing people. In order to free Arjuna from this fear, Lord Krishna first reveals the nature of the soul and body. He says “Don’t be upset about death; death happens only to the body. The soul, which is all pervading, does not die. Mind, which we identify as ourselves, will leave the body and gain another suitable body. So, there is nothing to be worried about death. Death is only to the body”




Attachment is preferential; Love is universal:
Lord Krishna’s next argument was that “Failing from your duty just because your kinsmen are on the other side is narrow selfishness, when your kinsmen are not acting according to dharma”. Fulfillment of dharma sometimes requires unusual sacrifices as well. Since Arjuna has a deep emotion towards his teachers and relatives, he refuses to fight against them. So, Lord Krishna explains that emotional attachments arise out of selfishness. True love is universal. It encompasses the good of all people, not just your teachers and relatives.



He also teaches that "In a war against adharma, you should be detached from your emotions and should be guided by your intellect. Being a warrior, you have always been willing to fight people whom you didn't know. Now just because you need to fight against your relatives and friends, you are saying 'war is wrong'. That is a convenient argument to escape from the current situation".
This applies in the present world also. People tend to give similar reasons like this to cover up the truth, when their friends have conducted some fraudulent actions. So, whenever we take a decision we should think twice and act according to dharma which will benefit most people than an individual.
Stay in the present:
We should not let our mind become agitated by anxieties about the future or worries about the past. Mind should be calm and controlled and concentrate on the present action. This is possible if we learn to control our senses by our intellect, like Krishna controlled the horses as the charioteer. This is a useful advice for any activity in life.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Renunciation ‘of’ action and Renunciation ‘in’ action:

Arjuna wants to give up performing his duty and equates that with the noble act of renunciation. Lord Krishna explains the difference between "renunciation of action" and "renunciation in action". Renunciation ‘in’ action is when a person performs his duties with a detached mental attitude and has no desires for pride, fame, power or fortune. It is an attitude achieved by mental sacrifice. The renounced person does not expect any pleasure from his action in return.

Renunciation ‘of’ action, on the other hand, is giving up all his actions and his duties. In this case, Arjuna has refused to fight against his foes due to the attachment he had for this relatives and he is expecting some pleasure in not killing his foes. No man is free from action, and that action should never be given up. According to Lord Krishna, "Relinquishment should be done for the sake of duty and not for the sake of attachment or fear"

Surrender to me:
After Arjuna's delusions about the nature of life, death and dharma has been clarified by Lord Krishna, Krishna gives a divine eye to Arjuna and reveals Krishna's Cosmic form, which is a being facing every way and emitting the radiance of a thousand suns, containing all other beings and materials in existence. By showing his giant structure he says, "I am the Creator and Destroyer of the universe. Even without you, Arjuna, all these warriors will be destroyed. Therefore, destroy your foes and fulfill your duty! Everything is pre-decided by me, so just be my instrument, the archer at my side!". This finally brings Arjuna to the realisation that his duty to fight is linked to the Lord's divine activity and he becomes ready to act according to dharma as revealed by Krishna's words.



Most of you might experience these kinds of ethical dilemmas in your daily lives. When doing your duty or action, in order to not get affected by the consequences whether it is good karma or bad karma, dedicate the work to God. Take an intellectual decision, not an emotional decision.
Keep in mind that nothing is permanent or real in this world except God. Everything will die except God because they had a beginning and therefore, will have an ending. Realise this truth. When doing your duty or an action, don't arrogate that you are the doer. All exist because of God. You will come to know this, when you come to know about God and his excellence. Until that time comes, you should have the faith.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RiverSure

Financial services

***Building Business on reputation is our goal***

## Need an Insurance?

Make sure you are covered adequately .

We provide insurance for the following:

- ✓ Home Contents & Building Insurance
- ✓ Motor Insurance
- ✓ Shop and office Insurance
- ✓ Restaurant and Take away Insurance
- ✓ Charities Insurance
- ✓ Travel Insurance
- ✓ Event Insurance

---

## Need a mortgage?

Make sure it's the right one.



You've spent all that time finding the right home - surely you should spend some time finding the right mortgage. We can help you do just that. Your home may be repossessed if you do not keep up repayments on your mortgage.

A fee of 1% of loan amount with minimum fee payable of £895 with an outset payment £295 payable when you apply for a mortgage, and balance to be fully paid upon receipt of offer. we will also be paid commission from the lender.

Ratnam Uthayananthan
Director
**Riversure Ltd**, LG05, China House, 401 Edgware Road, London NW2 6GY
Tel: 02089058881 | Mob: 07956334347 | info@riversure.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org